உ





# ஞானச்சுடர்

## ஆடி மலர் 2001




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ

சிவமயம்

## குறள் வழி

" பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்
நயனுடை யான்கண் படின்." [செல்வம்

பொருள் :

நன்மையை நினைப்பவனிடம் செல்வம் சேருமாயின் கனிமரம் ஒன்று பழுத்ததுபோல் அனைவருக்கும் உபயோகமாகும்.



உ

# நற்சிந்தனை

## ஆசான் வாசகம்

சிவசிவ என்றிடத் தீரும் பாவம்

சிவசிவ என்றிடும் போதினிலே செய்த
பாவமெல்லாம் ஓடும் பாரினிலே
அவனிவன் என்கின்ற வார்த்தையெல்லாம் போக்கி
ஐயன் திருப்பாதம் உண்மையதாய் நோக்கி
தவம்செய் வார்தமைத் தானாக நோக்கிச்
சச்சி தானந்தம் தன்னிடத்தே தாக்கில்
உவமையில் லாமுத்தி நிலையிலே போக்கும்
உண்மை யறிந்து சொன்னேன் யோகசுவாமி

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 43

2001 ஆடி

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| செல்வச்சந்நிதி முருகன் பூஞ்சோலை ...... | 1 - 5 |
| ஸ்ரீ முருக மந்திரம் | 6 - 8 |
| சந்நிதியும், கதிர்காமமும் | 9 - 13 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ...... | 14 - 17 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தல புராணம் | 18 - 19 |
| நித்திய அன்னப் பணிக்கு உதவி ...... | 20 - 23 |
| கற்றவர் விழுங்கும் | 24 - 27 |
| சந்நிதியே சரணம் | - 28 |
| சந்நிதியான் | 29 - 32 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி மகோற்சவ கால விபரங்கள் | - 33 |
| பாரதி படைத்த இலக்கியங்களில ...... | 34 - 35 |
| அருணகிரிநாதர் விழா | 36 - 37 |
| நூல் வெளியீட்டு விழா | - 38 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30 /- ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப்பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

உ



# முருகா

இராகம்:- ரேவதி தாளம்:- ஆதி

**பல்லவி**

முருகா எமக்கொரு முடிவே இல்லையா
முழுமுதலின் மகனே முறையோ நீதியோ — [ முருகா ]

**அநுபல்லவி**

உருவழிந்த உந்தன் உயரிய தேரதுபோல்
உலகிலே நாங்களென்றும் உழலுதல் தான்விதியோ — [முருகா]

**சரணம்**

இங்கும் அங்குமாக இடம்பெயர் நிலைகொண்டோம்
இடர்பல உறுத்தியுமே இரங்கலையோ சண்முகா
சங்கப் புகழ்சேர்த்த தங்கத் தமிழினத்தைச்
சந்நிதி வேலவா காத்திடத் தாமதமேன் - [ முருகா ]

தேவரைக் காத்திடவே திருப்போர் தொடுக்கலையோ
தீராத வினையெல்லாம் தீர்ப்பவன் நீயல்லவோ
யாவையும் இழந்துஇங்கே நாம்வாழல் தெரியலையோ
ஆறிரு விழியுமென்ன அருளினை இழ்ந்ததுவோ - [ முருகா ]

— **விஷ்ணுப்ரியா**

## 'ஞானச்சுடர்'
# ஆனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :**

ஆனி மாத மலருக்கான வெளியீட்டுரையைக் கிராம அலுவலர் திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் மேற்கொண்டார்கள். யாழ் குடாநாட்டிலுள்ள சமய அறிஞர்களது ஆற்றல்களை ஒன்றிணைத்து அதனை ஞானச்சுடர் மூலம் சைவ மக்களுக்கு வழங்கி வருவது மிகவும் மகத்தான ஒரு பணி என்பதைத் திரு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தனது ஆரம்ப உரையிற் குறிப்பிட்டார்கள்.

ஆறுமுகநாவலர் தோன்றிச் சைவத்தை வளர்த்ததுபோல இன்று ஞானச்சுடர் சைவ மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தி வருகின்றது. விளம்பரம் எதுவுமின்றி வெளியிடப்படும் இந்த மலர் உண்மையான சைவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட சந்தாதாரர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டும் வருகின்றதென்பதையும் தெளிவுபடுத்தினார்கள்

**மதிப்பீட்டுரை :**

சுடருக்கான மதிப்பீட்டுரை புத்தொளி சிவபாதம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எமது மொழி மொழியாக மட்டுமன்றிப் பக்தி இலக்கியத்தின் வெளிப்பாட்டிற்குரிய சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகவும் விளங்கி வந்துள்ளது என்பதைத் திரு. ந. சிவபாதம் அவர்கள் பல உதாரணங்கள் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பே சங்கப்புலவர்கள் இயற்றிய நூல்கள் சங்கப் பலகையில் விளம்பரப்படுத்தப்பட்டுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பின்பே வெளியீடு செய்யப்பட்டன. இந்த மரபில் ஞானச்சுடரும் மாதாமாதம் வெளியிடப்படுவது எமது பாரம்பரியத்தின் வெளிப்பாடென்றே கூறலாம்.

இந்த மலரில் பெண் எழுத்தாளர்களும் கணிசமான ஆக்கங்களை வெளியிட்டு வருவது மிகவும் போற்றத்தக்க ஒரு விடயமாகும் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

ஞானம் என்பது சிந்தித்துத் தெளிதல் என்று கூறிய சிவபாதம் அவர்கள் இந்தச் சுடரில் சிந்தித்துத் தெளிந்து ஞானத்தைப் பெறக்கூடிய கட்டுரைகள் இருப்பதையும் குறிப்பிட்டுத் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

தியானம் என்பது ரிஷிகளாலும் மற்றும் சமயப் பெரியார்களாலும் மிக நீண்ட காலத்திற்கு முன்பே உணரப்பட்ட ஒரு விடயம். தியானத்தின் பயன் பாட்டை நன்கு விளங்கி அதனை தனிமனிதனது பல்வேறு உள, உடற் பிணி களுக்கான தீர்வாக பயன்படுத்தி வந்தவர்கள் எமது இந்து சமயத்தினர்கள்.

இந்து சமய அரச குடும்பத்தில் பிறந்து தியானத்தின் வழியாக ஞானம் பெற்ற கௌதம புத்தரால் பௌத்த சமயம் உருவாக்கப்பட்டு பௌத்த மதத் திலும் தியானம் முக்கியம் பெற்றது. பௌத்த மதத்தினூடாக இந்த தியானம் சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்டது. சீனமொழியில் அது ''சான்'' என அழைக்கப்பட்டு பின் யப்பானில் 'சென்' என்ற பெயருடன் நிலை பெற்றுள்ளது. இவ்வாறு கீழைத்தேசங்கள் பலவற்றில் எமது சமயத்தின் தியானம் சிறப்பாக பயன்படுத்தப்படுகிறது.

இதேபோன்று மகரிஷி மகேஸ் யோகியினால் முன்மொழியப்பட்ட ஆழ் நிலைத் தியானம் என்பது மேலைத் தேசங்களில் போதை வஸ்துக்களைப் பாவித்து அதனால் பல்வேறு பாதிப்புற்றவர்களுக்கு தீர்வு காண்பதற்கு மட்டு மன்றி மற்றும் தொழிற்சாலைகள், பண்ணைகள் போன்றவற்றில் செயற்படு பவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் பயன்படுத் தப்பட்டு வருகிறது. இவ்வாறு தியானத்தினால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படும் வித்தியாசமான பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருவதை நாம் காணமுடிகின்றது.

ஆனால், தியானத்தின் ஊற்றாகக் கொள்ளக்கூடிய எமது மதத்தினர்கள் தியானத்தினுடைய பயன்களை தெரிந்து கொள்வதிலோ அவற்றை பயன்படுத்தி வாழ்க்கையை நெறிப் படுத்துவதிலோ கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை அதுமட்டுமல்ல, ஆலயங்களிலேனும் சிலநிமிட நேரங்கள்தன்னும் தியானத்தில் ஈடுபட்டு மனதை நெறிப்படுத்தி இறை வழிபாட்டை அமைதியாகவும், அடக்க மாகவும் மேற்கொள்ளும் பண்புகூட நலிவடைந்து வருவதையே காண முடிகின்றது.

எமது மூதாதையர் வாழ்க்கையுடன் மட்டுமல்ல எமது அன்றாட வாழ்க்கை யுடனும், எமது குடியிருப்புக்களுடனும் நேரடியாகத் தொடர்புபட்ட வேப்ப மரத்தினுடைய பயனை உணர்ந்த மேற்கு நாட்டவர்கள் அவற்றை தங்கள் பிரதேசம் எங்கும் வளர்த்து வருவதுடன் வேப்ப மரத்தினுடைய உரிமையையும் சட்டரீதியாக தமதாக்க முயற்சிக்கின்றனர் இந்த நிலையில் எமது சமயத்தின் ஊற்றான தியானத்திற்கும் இதே போன்ற ஒரு ஆபத்து ஏற்படும் நிலை வெகு தூரத்தில் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது.

# ஆடி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. ந. ரவீந்திரன்
( உதவி முகாமையாளர், மக்கள் வங்கி கன்னாதிட்டி யாழ். )

திரு. வ. பாலசிங்கம்
( கிராம சேவையாளர், கரணவாய் )

திரு. கு. மகாலிங்கம்
( சைவநீதி, கொழும்பு )

திரு. ப. சிவராசா
( தூதாவளை, கரணவாய் )

திரு. சி. இராமகிருஸ்ணா ( ஆசிரியர் )
( வடமராட்சி / கணிதக்கல்வி மூலவள நிலையம், கரணவாய் )

திரு. D. M. வேதாரணியம்
( ரதி மகால், கரணவாய் )

திரு. சி. நவரெத்தினம்
( துவாரகை, கரணவாய் )

திருமதி நா. செல்வநாயகம்
( அரசவீதி, உரும்பராய் )

திரு. S. இராசரெத்தினம் ( கனடா )
( கெருடாவில், தொண்டைமானாறு )

திரு. வே. கிருஸ்ணபிள்ளை
( K. V. K. மில் உரிமையாளர், உடுப்பிட்டி )

திரு. ம. ஸ்ரீகாந்தன்
( அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. )

அதிபர்
( அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி. )

உரிமையாளர்
( கந்தசாமி புடவை நிலையம், சந்நிதி வீதி அச்சுவேலி. )

திரு. M. P. தருமலிங்கம்
( பத்திரிக்கை முகாமையாளர், உடுப்பிட்டி. )

திரு. பொ. வியாகேஸ்
( நிர்வாகி பீகொன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி. )

திரு. மு. வைகுந்தவாசன்
( இலங்கை வங்கி, நெல்லியடி. )

திரு. இ. சண்முகலிங்கம்
( பிரதான வீதி, தொண்டைமானாறு. )

திரு. S. விக்னேஸ்வரராசா
( சுப்ராங் தொலைத் தொடர்புச் சேவை, கதிரிப்பாய். )

திரு. பொ. வெங்கடேஸ்வரன்
நகரசபை, வல்வெட்டித்துறை.

திரு. செ. தேவேந்திரநாதன்
( கணபதி வெதுப்பகம், உரும்பராய். )

## செல்வச்சந்நிதி முருகன் பூஞ்சோலை

# ஒருநாள் நினைவு அலைகள்

> பு. கதிரித்தம்பி <

அன்று அதிகாலை, சனிக் கிழமை, தைமாதம், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத் தொன்பதாம் ஆண்டு என நினைக்கின்றேன். நோயினால் வாடிச்சிறிது குணமடைந்தநிலை யில் இருக்கின்ற எனக்கு அதி காலை நாலுமணியளவில் தூக்கம் கலைகின்றது. ஓம் முருகா என்று உச்சரித்துக்கொண்டு துயிலெழு கின்றேன். செல்வச்சந்நிதி மணி ஓசையும் காதிற் படுகின்றது. விரைவாக எனது காலைக்கடன் களை முடித்து விட்டுக் கடவு ளைத் தொழுதேன். மனத்தில் பல நினைவுகள் ஓடிக் கொண்டி ருக்கின்றன. எமது வீட்டை விட்டுப் பாடசாலை வீதியில் நிற்கின்றேன். வீதியின் மேற்குத் திசையையும், கிழக்குத் திசை யையும் நோக்குகின்றேன். கிழக் குத் திசையில் மூன்று உருவங்கள் தென்படுகின்றன நேரம் ஐந்து மணியாகஇருக்குமென்று நினைக் கின்றேன். இருள் செறிந்திருந்த தனால் மனத்தில் மனித உருக் கள் என்று எண்ணுகின்றேன். கண்களை நன்கு அகலமாக விரித் துப் பார்த்தும் யார் என்பதை அறிய முடியவில்லை..



இருள் சிறிது, சிறிதாக விலகிக் கொண்டிருக்கின்றது. இடைக்காடு கிழக்கு வாசிக சாலை முன்வளவை நோக்கிச் சென்ற மூன்று உருவங்கள், மிகக் குறுகிய நேரத்தில், அவ் வளவவ விட்டு வீதிக்கு வருகின் றன இருநூறு மீற்றர் தூரத்தில் வந்து கொண்டிருப்பதனால் அவர்கள் யாவர் என்பதை அறிந்து கொண்டேன். அவர்கள் மூவரும் வீதியின் மறு வீட்டுக்குப் போகின்றார்கள். உடனே திரும்பி வெளியே வருகின்றார் கள். இவர்கள் மூவரும் விரை

வாகச் செல்வதும், வருவதும், அவசர அவசிய விடயத்தை யுடையது போல் என் மனக் கண் ணிற் பட்டது. அவர்கள் விட யத்தை அறிய ஆவலுடன் வீதி யில் நின்றேன். அவர்கள் மூவ ரும் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நான் கைகூப்பிவணக்கம் சொன்னேன். இடைக்காட்டுப் பெரியவர்களா கிய திரு. வ. செல்லையா அவர் களும், திரு. சி. நாகமுத்து அவர் களும் கதிரிப்பாயில் வசிப்பவரும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதிப் பூசகர் பெருமதிப்புக் குரிய திரு. சி. துரைஐயர் அவர் களும் வணக்கம் சொன்னார்கள்.

இடைக்காட்டுப் பெரியவர் கள் இருவரும் என்னைப் பார்த் துத் "தம்பி இன்று செல்வச் சந்நிதி முருகன் பூஞ்சோலை கொத்த வேண்டும், நீயும் கட் டாயம் வருகை தரவேண்டு மென்றனர்." இதுவும் கந்தன் சோதனையா என்று மனத்தின் கண் நினைந்து, மூவரையும் பார்த்துப் பெரியவர்களே! "முருகன் நாயிலும் கடைப் பட்ட என்னையும், ஒரு அடிய வனாக நினைக்கின்றானா? அவர்பணி செய்யயார் மறுப்பர்? நான் வருகின்றேன் எனப் பணி வாகக்கூறினேன்." மூவரும் மறு வீடுகளுக்கும் சென்று கொண் டிருக்கின்றார்கள்.

விரைவாகக் காலை உணவை உண்டு, தந்தையில்லாப் பாவி யாகிய நான் எனது தாயாரிடம் விடைபெற்று, இடைக்காடு வாசிகசாலையைச் சென்றடைந் தேன். அங்கு ஏறக்குறையப் பத்துப் பேர்வரை கூடி நின்ற னர். எல்லோரும் தோளில் மண் வெட்டியும் கையிலே கத்தியு மாகக் காட்சியளித்தனர். பெரி யவர்களாகிய திரு. வ. செல் லையா அவர்களும் திரு. சி. நாகமுத்து அவர்களும் வந்து விட்டார்கள். பெரியவர்கள், இன்னும் யாவரும் வரவிருக் கிறார்களா என வினவினர். இல்லையென்ற பதில் கிடைத்த தும், பெரியவர்கள் முன் செல்ல நாம் அவர் பின் சென்றோம். இடைக்காடு புவனேஸ்வரி அம் மன் ஆலயம் தென்பட்டதும் பெரியவர்கள் அம்பாள் நாமத்தை உச்சரிக்க, நாமும் உச்சரித்தோம். ஆலய முன் றிலை அடைந்ததும், நாங்கள் எல்லோரும் அட்டாங்க நமஸ் காரம் செய்தோம். அதன்பின் தொண்டைமானாறு ஏரியை அடைந்தோம். முருகன் ஆலயம் தென்பட்டதும் "முருகா, முருகா" என்று சொல்லிக் கொண்டு கடல் ஏரியைக் கடந் தோம் முருகன் இருக்கும் ஆல யச் சூழலை அடைந்து விட் டோம். ஆச்சிரமம் (மடம்) வெள்ளிக்கிழமை மடம் என்ப வற்றைக் கடந்து முருகன் வாயிலை அடைந்தோம். அங்கு எமது வரவை எதிர் நோக்கிய வராய் பெருமதிப்புக்குரிய திரு. சி. துரைஐயா அவர்கள்

எமக்கு அமுதம் என்பது பசுவின் பால்.

கையில் விபூதித் தட்டத்துடன் நின்றார். நாம் ஒவ்வொருவரும் விழுந்து வணங்கி, விபூதி வாங்கி, நெற்றியில் அணிந்து கொண்டோம்.

ஐயா அவர்கள் எம்மை அழைத்துக் கொண்டு பூஞ்சோலை வடக்கு வாயிலை அடைந்தார். அவர் பூஞ்சோலைக் கதவைத் திறந்து எம்மை உள்ளே வரும்படி அழைத்தார். உள்ளே செல்ல எமது கால்கள் கூசின. தேகத்தில் ஒரு உணர்ச்சி தோன்றியது. ஐயா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நாம் வேலை செய்ய ஆரம்பித்தோம்.

திரு. சி. துரைஐயா அவர்கள், தையல் அம்மா மடத்திற்கு விரைந்து சென்றார்கள். பூங்கொல்லை கொத்த அடியவர்கள் வந்து விட்டார்கள் உணவை ஆயத்தம் செய்யுங்கள் என்று திரு. சி. துரைஐயா அவர்கள் அம்மாவுக்குக் கூறினார்கள். அதைக் கேட்டதும் தையல் அம்மா அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

தையல் அம்மா அவர்கள் சமையல் செய்வதற்கு வேண்டிய பாத்திரங்களை எடுத்தார்கள். அரிசியைப் பெரிய கடாரத்தில் இட்டுச் சமைத்தார்கள். சந்தோஷ மிகுதியினால் அம்மா வந்தவர்கள் தொகையைக் கேட்கவில்லை. விரைவு விரைவாக தன்னந் தனியே உணவு சமைத்து முடித்து, அமுது கொடுக்கும் ஆவலுடன் காத்து நிற்கிறார்.

இது இவ்வாறு இருக்க, பூங்கொல்லை கொத்தச் சென்ற நாங்கள் ஒருமுறை நாலா பக்கமும் உள்ள செடிகளையும், கொடிகளையும் உற்று நோக்குகின்றோம். வண்ண வண்ணப்பூக்கள், வடிவான பூக்கள் எண்ணிறந்த பூக்கள் பூஞ்சோலை எங்கும் நிறைந்திருப்பதனைக் கண்டு வியப்பு அடைகின்றோம். வட கிழக்கே உள்ள பூஞ்சோலை மடத்தையும் காண்கின்றோம். செடிப் பூக்கள் வரிசையாக ஒரு புறமும் கொடிப்பூக்கள் பந்தல் இட்டு இன்னொரு புறமும், கோட்டுப் பூக்கள் மதில் ஓரங்களில் நாட்டப்பட்டு இருந்தன. முல்லை, மல்லிகை செண்பக மலர்களின் வாசனை பூஞ்சோலை எங்கும் பரவி இருந்தது. அதனால் நாம் மனப் பூரிப்புடனும், உற்சாகத்துடனும், விரைவாகவும் வேலையைச் செய்தோம். சாணி பரவி விட்டு நிலத்தைக் கொத்தினோம். வளர்ந்திருந்த செடிகளையும், கொடிகளையும் அளவாக வெட்டினோம். பிற்பகல் ஒன்றரை மணியளவில் பூஞ்சோலை வேலை யாவும் இனிது முடிவுற்றது. நான்கு பக்கமும் மதிலாற் சூழப்பட்ட மூன்று பரப்புக் கொண்ட பூஞ்சோலையைக் கொத்தி முடித்து விட்டோம்

மென்று சந்தோஷம் அடைந்தோம்.

எமது வேலை முடியும் பொழுது ஐயா வந்தார். அளவிலா மகிழ்ச்சியடைந்து திருவமுது உண்டு செல்லும்படி அன்பாகக் கேட்டுக் கொண்டார். நாம் எல்லோரும் நீராடி விட்டுத் தையல் அம்மா மடத்திற்குச் சென்றோம். எம்மைக் கண்டதும் அம்மா இன்முகங்காட்டி, திருவமுது உண்ண அமரும்படி கேட்டுக் கொண்டார். நாங்கள் வரிசையாக அமர்ந்தோம். எமது தொகையைக் கண்டதும் அம்மா மனத்தில் கவலை அடைந்தார். கூடுதலாகச் சமைத்து விட்டேன் என்ன செய்வேன் முருகா என்று மனத்தில் நினைத்து வேதனை அடைந்தார்.

ஐயா இலைகளை ஒவ்வொருவருக்கும் போடுகின்றார். இலைகளோ மிகவும் பெரியவை. தையல் அம்மா சாதத்தை இலை நிறையப் போடுகின்றார். அதன் மேல் அம்மா கறியைப் போடுகின்றார். எமக்குப் போட்ட உணவின் தொகையைப் பார்த்து "நாம் முழுமையாக உண்டு முடிப்போமா?" என்று ஒருவரையொருவர் பார்க்கின்றோம். கறி போட்டவுடன் அம்மா, "இன்னும் அமுது இருக்கின்றது வெட்கப்பட வேண்டாம் சாப்பிடுங்கள்" என்று கூறினார். நாம் முருகனை நினைந்து சாப்பிட ஆரம்பித்தோம். உண்ண உண்ணத் தெவிட்டாத சுவையாக உணவு இருந்தது. நாங்களும் உணவை உண்டு முடிக்கிறோம். அம்மா இரண்டாவது முறையும் இலை நிறைய சாதத்தைப் போடுகின்றார். நாங்களும் சாதத்தைச் சாப்பிட்டு முடித்து, இன்று இரவு உணவு எமக்கு வீட்டில் தேவையில்லை என்று சொல்லி உண்ட இலையுடன் எழும்புகின்றோம். இலைகளை வெளியே போட்டு, கையலம்பி நீர் பருகினோம். அம்மாவுக்கும் ஐயாவுக்கும் இருகை கூப்பி, இன்றுபோல் என்றும் உணவு சாப்பிடவில்லை" உணவு சமைத்த உங்களுக்கு மிகவும் நன்றியென்று கூறி, விடைபெற்றோம். அம்மா உணவு உண்டு முடிந்ததுஎன்றுஎண்ணி மகிழ்ச்சியடைந்தார்.

நாம், முருகன் வாயிலை அடைந்து வணக்கம் செலுத்தினோம். அதன்பின் பெரியவர்கள் முன்செல்ல நாம் எமது ஊரை நோக்கிப்புறப்பட்டோம். நாம் உண்ட உணவின் சுவையையும் தொகையையும் பேசிக் கொண்டு தொண்டைமான் ஏரிக்கூடாக நடந்து கரையை அடைந்தோம். 'பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது' ஒருவரை ஒருவர் பார்க்கின்றோம். இதைப்பெரியவர் ஒருவர் அவதானிக்கிறார். அப்பொழுது பெரியவர் நீங்கள் உணவைப் போடப்போட நிரம்ப உண்டீர்கள். அதுமட்டுமன்றி இன்று

நோயாளிக்கு உறவு மருத்துவன்.

இரவு வீட்டில் சாப்பாடு தேவை யில்லை என்றும் கூறினீர்கள். எப்படி அன்னதானக் கந்தன் அருள் என்று கேட்டார். பெரியவர் மேலும் தொடர்ந்து, " தடாதகைப் பிராட்டியாருக்கும் சிவபெருமானுக்கும் கலியாணம் நடந்த பொழுது உணவு மிஞ்சியிருப்பதைக்கண்டு தடாதகைப் பிராட்டியார் வேதனை அடைந்தார். இதை உணர்ந்த சிவபெருமான் குண்டோதரனுக்கு கடும்பசியை உண்டாக்கி உணவு முழுவதையும் உண்ண வைத்தார். திரும்பவும் குண்டோதரனுக்குப் பசியை ஏற்படுத்தினார். அதுபோலத்தான் அன்னதானக்கந்தன் உங்களுக்குப் பசியை உண்டாக்கி உண்ண வைத்துத் திரும்பவும் ( கடலைக் கடந்ததும் ) பசியை ஏற்படுத்தியிருக்கிறார் என்று கதையைச் சொல்லி முடித்தார்.

நாம் பெரியவர் சொன்ன கதையை நன்கு புரிந்து கொண்டோம். பசி எம்மைத் தள்ள விரைந்து சென்று உணவு அருந்திய பின் கந்தன் புதுமையை வீட்டிலுள்ளோருக்கே கூறினோம்.

அன்று செல்வச்சந்நிதி முருகனுக்குப் பூஞ்சோலையில் மலர்கள் கொய்து சாத்தினார்கள். மலர்களைக்கொண்டு கெண்டை, கண்ணி, தொடை, தார் என வகைவகையான மாலைகளைத் தொடுத்தார்கள். இன்று முருகன் பூஞ்சோலை அழகுகுன்றி வகைவகையான பூ மரங்களின்றிச் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு மேற்குப்புறத்தே காணப்படுகிறது. முன்னிருந்த நிலை எப்போது வருமோ என்று என் நெஞ்சம் ஏங்குகின்றது. இன்று எல்லாம் கலியுக ஆட்சியில், செல்வச்சந்நிதிக் கந்தன் அருளைப் பார்ப்போம்.

## கோபம் பொல்லாதது

ஆறுவது சினம் என்று ஔவையார் சொன்னார். கோபம் மனத்திலே எழுகின்ற ஒரு தீயகுணம் கோபம் வரும்போது உடம்பு வரண்டு போகும். புத்தி நிலை தவறி விடும் கோபம் கொண்டவர் தான் செய்வதை அறியமாட்டாமல் மயங்குவர். கோபத்தினால் வருகின்ற அடிபிடி சண்டைகள் பல. அவற்றால் பெரிய ஆபத்துக்கள் உண்டாகும். அவை உண்டாகாமல் இருப்பதானால் கோபத்தை அடக்குதல் வேண்டும்.

இல்வாழ்வானுக்கு உதவி நல்லற மனைவி.

உ

# ஸ்ரீ முருக மந்திரம்

## பேசா அநுபூதி பிறந்ததுவே

< சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் >



பிறபொருட்கள் எதையும் தியானிக்காது, இறைவனுடைய அருட்குறியை மாத்திரம் தியானித்தால் ஆன்மாவைப் பீடித்திருக்கும் பசு ஞானம், பாச ஞானம் எல்லாம் நீங்கிவிடும். ஒப்பற்ற வேலாயுதத்தை உடைய கந்தவேட் பெருமான் மௌன குருவாய் வந்து உள் நின்று உணர்த்தியதும் உலகத்தாரோடு நெருங்கும் உறவு அற்று, வாக்கும் அற்று, நினைவும் அற்று, சுட்டியறிகின்ற அறிவும் அற்று அறியாமையும் முற்றாக நீங்கிவிட்டது என்பதனைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் தெளிவாக விளக்குகிறது

" குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே "

அறநெறியில் நிற்பவர்கள் மீது இறைவன் அன்பு வைக்கிறான். பக்குவப்பட்டு அருட் செம்மையுடையவர்கள் பால் இறைவன் அருள் வைக்கிறான். ஆன்மாக்கள் இறைவனிடம் அன்பாகிய வித்தை விதைத்தால் அருளாகிய பழம் பழுக்கும்.

மனிதர் இழிவடைவது தீயொழுக்கத்தால்.

அடியவர்களாகிய நாம் இறைவனிடம் அன்பு செலுத்தி வணங்கினால் இறைவனுடைய அருட்கடாட்சம் நமக்குப் பூரணமாகக் கிடைக்கும். அன்பின் மிகுதியால் அடியேனது உயிரோடு உடம்பும் இன்ப வெள்ளமாய்க் கசிந்துருகும்படி என் நிலைக்குத் தகுதியில்லாத இனிய அருளை இறைவன் எனக்குத் தந்தான். இந்தப் பேருதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் என்று உள்ளம் உருகி மணிவாசகனார் பாடுவதை அவருடைய தெய்வ வாசகமாகிய திருவாசகத்தின் கோயிற்றிருப்பதிகப் பாடலில் காணலாம்.

" அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற்கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரசே."

இறை அநுபூதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசை தடையாக இருக்கும். இறைவனிடத்திலே கூட அன்புதான் வைக்க வேண்டும். ஆசை வைக்கக் கூடாது ஆசைகள் அதிகரிக்கத் துன்பமும் அதிகமாகும். ஆசையை விட்டால் பேரானந்தம் கிடைக்கும். இதனைத் தவயோகி திருமூலநாயனாரின் தமிழ் மந்திரம் பின்வருமாறு விளக்குகிறது.

" ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே."

தூய்மையான இரத்தின மணிகளும் ஆடையும் அணிகின்ற வள்ளி பிராட்டியாரின் உள்ளக் கோயிலிற் குடிகொண்டிருக்கும் காதலனாக முருகப் பெருமான் காட்சி தருகிறார், ஞான பண்டிதனாகிய முருகப் பெருமானின் அன்புடன் கூடிய அருளினால் ஆசையாகிய விலங்கு தூள்தூளாக முற்றிலும் பொடியாகியது இதனால் பேசா அநுபூதியாகிய மௌன நிலை அடியேனுக்குத் தோன்றியது என ஞானநிலைக்கு ஆதாரமான மௌனநிலையைத் தான்பெற்ற சிறப்பை அருணகிரியாரின் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

மனிதத் தன்மையைத் தருவது நல்லொழுக்கம்.

'' தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன்பருளால்
ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே ''

அடியார்க்குப் புகலிடமாயிருப்பது முருகனுடைய திருவடியே ஆகும். இறைவனுடைய திருவடி தீட்சை பெற்றவர்களிடம் யமன் அணுகமாட்டான். வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்ந்த சிவநெறித்தொண்டராகிய அப்பர் பெருமானுக்குத் திருநல்லூரிலே சிவபெருமான் திருவடி சூட்டித் தடுத்தாட்கொண்ட சிறப்பினைப் பின் வரும் பெரியபுராணப் பாடல் விளக்குகிறது.

நன்மை பெருகருள் நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத்தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

எதனாலும் அழிக்க முடியாத தலையில் உள்ள அயன் எழுத்தை அழிக்குங் கருவி கந்தவேளது கழலிணையாகும். அப்பரமபதியின் தாள்மேல் வீழ்வோர்க்கு எல்லா வினைகளும் பொசுங்கிவிடும். செவ்வேளை எவ்வேளையும் தொழுவோர்க்குப் பிரமனால் எழுதப்பட்ட தலையெழுத்து அழியும் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பவாழ்வு கிடைக்கும். '' கால்பட்டழிந்த திங்கென்றலை மேலயன் கையெழுத்தே '' என இந்த உண்மையைக் கந்தரலங்காரப்பாடல் வரி தெளிவாகக் கூறுகிறது.

கந்தர் அநுபூதியின் நாற்பத்துநான்காவது பாடல் அருணகிரியாருக்கு ஆறுமுகப் பெருமான் திருவடி தீட்சை தந்த அருட்டிறத்தினை எடுத்து விளக்குகிறது. பகைவர்களையும் மலமாயா கன்மங்களையும் அழிக்கின்ற ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய முருகனுடைய திருவடிகள், வணங்குவோர்க்கு முத்தியைத்தரும் முருகப்பெருமானின் திருத்தலங்களிலும், வேதங்களிலும், வள்ளி பிராட்டி வாழும் கானகத்திலும், தினைப்புனத்திலும் கமழ்வது முருகன் திருவடியே ஆகும். அத்தகைய ஞானத்திருவடியை அடியேனும் சென்னியிலே சூட்டிக்கொள்ளுமாறு தந்தருளிய முருகப்பெருமானுடைய கருணைத் திறத்தைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

'' சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே! ''

ஒருவர் அறிவாளியாவது சாதுக்கள் கூட்டத்தால்.

உ

# சந்நிதியும், கதிர்காமமும்

## — ஒரு ஒப்பீடு —

வல்வை ந. அனந்தராஜ்

ஈழத்து மாமன்னன் இராவணேஸ்வரனாலும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும், திருமூலராலும் 'சிவபூமி' எனப் போற்றப்பட்டுப் பாடல் பெற்ற இலங்கையில் முருக வழிபாடு எந்த நிலையில் இருந்தது என்பதை ஆராய்வதற்கும், ஈழத்திற் பரந்துபட்ட முருக வழிபாட்டின் தோற்றுவாயை அறிந்து கொள்வதற்கும் புராண கால வரலாற்றையுடைய கதிர்காமத்தையே மையமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

திருப்புகழில்,

" இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே."

என்ற பாடல் அடிகளின் மூலமும்,

" மணிதரளம் வீசி யணியருவி சூழ
மரகதமயூரப் பெருமாள் காண்",

என்றும் பல்வேறு பாடல் அடிகளினூடாகக் கதிர்காமத்தின் இயற்கை அழகுகளும், கதிர்காமக் கந்தனின் பெருமைகளும் சிறப்பாக எடுத்தாளப் பட்டுள்ளன.

ஈழத்தின் தென் மூலையில் அமைந்துள்ள கதிர்காமத்திற் கான வரலாற்றுச் சான்றாதாரங்கள் உள்ள போதும், வட முனையிற் புகழ் பெற்றிருக்கும் சந்நிதியானுக்கு 20 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காலம் வரை எழுத்து வடிவிலான சான்றாதாரங்கள் போதியளவு கிடைக்க வில்லை.

இந்த நிலையில் சந்நிதி பற்றிய செய்திகளை அறிவதற்குச் செவிவழிச் செய்திகளும், சந்நிதியோடு தொடர்பான ஐதீகங்களும், இன்றைய கோயில் நடைமுறைகளும், கதிர்காமத்துடன் தொடர்பான சடங்குகளும் இது வரை சந்நிதி தொடர்பாக வந்த இலக்கியங்களுமேமூலாதாரணங்களாகின்றன.

சந்நிதி முருகன், தனக்கென ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்று திருவுளம் கொண்டதால், சிறுவன் வடிவில் வந்து, சாதாரண கடற்றொழிலாளியாக இருந்த மருதர் கதிர்காமரைப் பூசகராக்கித் தன் ஞான சக்தியாகிய வேலைப் பிரதிட்டை செய்து பூசிக்குமாறு பணித்ததுடன், அவருக்குக் கதிர்காமப் பூசை முறைகளையும் காட்டிய திருவிளையாடல்களுடன் சந்நிதி ஆலயத்தின் தோற்றம் எழுச்சி பெறத் தொடங்கியது.

அதன் தொடர்ச்சியாகவே சந்நிதிக்கும் கதிர்காமத்திற்குமான உறவும், வழிபாட்டு மரபுகளும் பல வழிகளில் ஒத்த தன்மையைக் கொண்டவையாக வளர்ச்சி பெற்றமை வடக்கும், தெற்கும் முருக வழிபாட்டுப் பாரம் பரியத்தைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொண்டுள்ளன என்பதை உணர்த்துகின்றது.

அந்த வகையில் கதிர்காமம், சந்நிதி இரண்டிற்கும் இடையிலான பின்வரும் தொடர்புகளை நோக்கும் பொழுது, ஈழத்தில் வளர்ச்சி பெற்றிருக்கும் முருக வழிபாடு காலத்தால் முந்தியது என்பதை அறிய முடிகின்றது.

1, கதிர்காமத்திலும், செல்வச்சந்நிதியிலும் ஆகமச் சாயல் கொண்ட வானுயர்ந்த கோபுரங்களோ, விமானங்களோ, தூபிகளோ, சிற்பவேலைப் பாடுகள் நிறைந்த கட்டடங்களோ, கொடித்தம்பம், பலிபீடம் போன்றவைகளோ இல்லை.

இது முருகன் எப்பொழுதும் எளிமையையே விரும்புபவன் என்பதைக் காட்டுவதாகும்.

2, இரு ஆலயங்களிலும் பிராமணரல்லாத ஜீவனோ பாயத் தொழில் புரிந்தவர்களின் பரம்பரையினாற் பூசைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கதிர்காமத்தில் வேடுவர் குலப் பரம் பரையினராலும் சந்நிதியிற் பரதவகுலப் பரம்பரையினராலும் பூசைகள் செய்யப்பட்டுவருகின்றன.

3. இரு ஆலயங்களினதும் பூசகர்கள் பண்டைத் தமிழர் பண்பாட்டிற்கமைய வாய்கட்டி மௌன பூசைகளை மேற்கொள்கின்றனர். இங்கு பூசை வழிபாட்டில் மந்திரங்கள் உச்சாடணம் செய்யப்படுவதில்லை.

பெரியவராதல் தவத்தால்.

4. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான பூசைகள், அபிஷேகங்கள், ஓமம் வளர்த்தல் என்பன நடைபெறுவதில்லை. ஆகமம் சாராத இயற்கை நெறிப் பாரம் பரியங்களுக்கு அமையவே பூசைகள் நடைபெறுகின்றன.

ஆனால் சந்நிதியில் அண்மைக் காலமாக அபிஷேகம் போன்ற சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட சாயல் மருவிவருவதையும், ஆகமம் சார்ந்த கட்டட அமைப்புக்கள் படிப்படியாக வருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

5. இரு ஆலயங்களினதும் தலவிருட்சமாகப் பூசிக்கப்படுபவை இடைவெப்ப வலயத்திற்குரிய தாவரங்களாகவே காணப்படுகின்றன.

சந்நிதியின் தலவிருட்சமாகப் பூவரசு மரமும், கதிர்காமத்தின் தலவிருட்சமாக வேப்ப மரமும் பூசிக்கப்பட்டு வருகின்றன.

6. மூலஸ்தான மூர்த்தியாக இரு ஆலயங்களிலும் வேல் வழிபடப்படுகின்றது. இதனால் இரண்டு ஆலயங்களுமே படைக் கோயில்கள் எனப்படுகின்றன. இங்கு முருகனின் மூல விக்கிரகம் வழிபடப் படுவதில்லை. மேலும் பூசைகளின் போது கதிர்காமத்திலும், சந்நிதியிலும் மூலஸ்தான மூர்த்திக்குரிய பூசைகள் முடிவடைந்த பின்னரே ஏனைய மூர்த்தங்களுக்குரிய பூசைகள் இடம் பெறுகின்றன.

7. இரண்டு ஆலயங்களும் ஆறுகளுடனேயே மருவிக்காணப்படுவதால், இரண்டுமே ஆற்றங்கரையான் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

கதிர்காமம் மாணிக்க கங்கைக் கரையிலும், செல்வச்சந்நிதி தொண்டைமானாற்றங் கரையிலும் அமைந்து எழிற்கோலத்தை வழங்குகின்றன.

8. உற்சவ காலங்களில் செல்வச்சந்நிதியில் மருதர் கதிர்காமரின் பரம்பரையைச் சேர்ந்த பருவமடையாத சிறுமியர் நெய் விளக்குக் கொண்டு ஆரத்தி எடுப்பது போலவே கதிர்காமத்தில் வேடுவர் குலப் பெண்கள் நெய்விளக்கெடுத்து ஆரத்தி எடுக்கும் மரபு பேணப்பட்டு வருகின்றது.

9. பண்டைய சங்க இலக்கியங்களில் முருகனுக்குத் தேனும் தினைமாவும் நிவேதனமாகக் கொடுக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. அவ்வழிபாட்டின் எச்சமாக இன்றும் ஈழத்தின் முதன்மையான வேற்படைக் கோயில்களான சந்நிதியிலும், கதிர்காமத்திலும் தேனும் தினைமாவும் முக்கியமான நிவேதனப் பொருட்களாக மாவிளக்காகப் படையல் செய்யப்படுகின்றன.

மனதை வென்றவன் எதற்கும் அஞ்சான்.

முருகனுக்கு வள்ளி வழங்கியதாகக் கூறப்படும் தேனும் தினைமாவும் சேர்ந்த உணவை நினைவு கூரும் வகையிலேயே இன்றும் இரு ஆலயங்களிலும் இவை சிறப்பாகப்படையல் செய்யப் படுகின்றன.

10. கதிர்காமத்திற் கொடியேற்றம் நடைபெறுவதற்கு முதல் நாள் செல்வச்சந்நிதியில் இருந்து வேல் வழியனுப்புவிழாவும், கதிர்காமத் தீர்த்தத் திருவிழா அன்று கதிர்காமத்திலிருந்து முருகன், சந்நிதிக்குத் திரும்பிவரும் பொழுது வரவேற்கும்சடங்கும் இன்றும் பேணப்படுகின்றன. இந்த இரு பூசை வழிபாட்டிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். அதே போன்று கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவின் இறுதியில் வேற்பெருமானை யாழ்ப்பாணம்அனுப்பிவைக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்று வருவது கதிர்காமத்திற்கும், செல்வச்சந்நிதிக்கும் முருகவழிபாட்டுடன் இருந்த நெருங்கிய தொடர்பு புலப்படுத்தப்படுகிறது.

இதனாலேயே கதிர்காமத் தலத்தைப் பற்றியும், அங்கு நடைபெறும் சடங்குகளைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்த அருணகிரிநாதர், அவ்வாலயம் பற்றிய பல திருப்புகழ்களைப் பாடிவிட்டு. யாழ்ப்பாணம் பற்றியும் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

அருணகிரிநாதரின் பாடல் அடிகளில் வரும்,

"ஏற்போர் தம் வந்திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பரப்பை நெடுமதின்
யாழ்ப்பா ணயன் பட்டினமருவிய பெருமாளே!

என்று யாழ்ப்பாணம் செல்லும் முருகப்பெருமானைப் பற்றிப் பாடியுள்ளார்.

ஆண்டு தோறும் கதிர்காமத் தீர்த்த உற்சவத்தின் இறுதியில், யாழ்ப்பாணத்திற்கு வேல் வழியனுப்பும் சடங்கினை அறிந்திருந்த அருணகிரிநாதர்,

"யாழ்ப்பா ணாயன் பட்டின
மருவிய பெருமாளே!"

என்று சந்நிதி முருகனையே பாடியுள்ளார் என்பதை அறிய முடியும். ஏனெனில் நல்லூரிலோ மாவிட்டபுரத்திலோ, கந்தவனக் கடவையிலோ கதிர்காமக் கந்தன் திருவிழா முடித்துத் திரும்பி வரும் உற்சவமும், சடங்கும் நடைபெறுவதில்லை. இவ்வாறு கதிர்காமத்துக்குச் செல்வச்சந்நிதியுடனான தொடர்பை அருணகிரிநாதர் அறிந்தமையினாலேயே, அதனை மனத்திற் கொண்டே இப்

பாடலைப் பாடியுள்ளார் போலும்.

10. சந்நிதியைப் போலவே கதிர்காமத்திலும் நடைபெறும் உற்சவ காலச் சடங்குகளில் தினமும் வீதியுலாவின் பொழுது சுவாமி வள்ளியம்மன் கோயிலுக்குச் சென்று, தங்கியிருந்து செல்வதும், தீர்த்த உற்சவத்தன்று தீர்த்தமாடி முடித்து, மூடு பல்லக்கில் மீண்டும் திரும்பும் பொழுது முருகன் தனது மூலஸ்தானக் கோயிலுக்குள் செல்லாது வள்ளியம்மன் கோயிலுக்கே சென்று, அன்று மாலைவரை அங்கேயே தங்கியிருந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார்.

இவ்வாறு முருக வழிபாட்டிலும், மரபு இரீதியான சடங்குகளிலும் சந்நிதியும், கதிர்காமமும் பல வழிகளில் ஒத்துப் போவதன் மூலம், ஈழத்தின் தொன்மை மிக்க முருக வழிபாடானது வடக்கில் இருந்து, தெற்குவரை வியாபித்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

## சந்நிதிக்கு வாருங்கள்

சந்நிதிக்கு வாருங்கள் — மனச்
சங்கடங்கள் தீருங்கள்.

அரோகரா . அரோகரா — என்று
ஆற்றங்கரையினிலே அமிழ்ந்தெழும்பி
ஆறுமுகனிடம் தஞ்சம் அடையுங்கள்
ஆறாத்துயரனைத்தும் பொடிநீறாக்குவான் வடிவேலனவன்.

ஓம் முருகா ஓம் முருகா...... என்று
குருசரவணபவனைக் கும்பிட்டு — உங்கள்
குறை, குற்றங்களை எடுத்துச்சொல்லுங்கள் — அவை
அனைத்தும் நிறைவு தந்திடும் தகப்பன் சுவாமியவன்.

கந்தா! கடம்பா! . கார்த்திகேயா! .. என்றால் —
அருட்பசியைத்தீர்ப்பான் ஆறுபடையப்பன் [ உங்கள்
தாகம் தாகம் .. பசிபசி .. என்றால் — உகந்த
விருந்து தந்து மகிழ்வான் சந்நிதியான் ஆச்சிரமத்தான்.

சந்நிதிக்கு வாருங்கள் — மன
நிம்மதிக்கு வாருங்கள்.

— இ. இராஜேந்திரன் —

சரியானதை செய்யாமை கோழைத்தனம்.

உ

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# அர்ச்சுனன் தவம்

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்

வியாசமகரிஷி விடைபெற்றுச் சென்றதும் பாண்டவர்கள் சரஸ்வதி ஆற்றங்கரையை அடைந்து அங்கே தங்கலாயினர். ஒருநாள் யுதிஷ்டிரர் அர்ச்சுனனைத் தனியே அழைத்துச் சென்று வியாசமகரிஷி உபதேசித்த மந்திரங்களை அவனுக்கு உபதேசித்து, " அன்புமிக்க சோதரனே! தேவர்களின் அருளாசிகளைப் பெற்றால் நாம் மேன்மையடையலாம். எனவே, நீ இமயமலைக்குச் சென்று மனத்தை அடக்கிப் பெருந்தவம் புரிந்து இந்திரன் முதலானோரிடம் பெரும் படைக்கலங்களைப் பெற்றுத் திரும்புதல் வேண்டும். எனவே, நீ புறப்பட்டுச் சென்று அக்காரியத்தை முடித்து வருவாயாக " என்று பணித்தார். யுதிஷ்டிரரின் உரைகளைச் செவிமடுத்த அர்ச்சுனன் தவம் செய்யும் நோக்குடன் வடதிசைக்கு ஏகினான்.

இமயமலைச் சாரலைக் கடந்து இந்திரகீல மலையை அடைந்தான். அம்மலையிலே கைகளை மேலே உயர்த்திய வண்ணம் ஒருகாலில் நின்றவனாய்த் தவம் புரியலானான் சில நாட்கள் சென்றதும், ஒருநாள் " நில் " என்ற ஒலி ஒன்று அர்ச்சுனன் செவியில் வீழுந்தது கண்களைத் திறந்து யாரென நோக்கியவேளை முனிவர் ஒருவர்மரத்தின்கீழ் நிற்பதனைக் கண்ணுற்றான். அம்முனிவர் அர்ச்சுனனை நோக்கி 'இளவலே நீயார்? யாது காரணம் பற்றித்தவம் புரிகிறாய்? ' என்று வினாவினார். அர்ச்சுனனோ அவரின் வினாக்களுக்கு விடையளிக்காது தபஸில் ஈடுபடலானான். இதனைக்கண்ணுற்ற முனிவர் மேலும் "பகைவரை அழிக்கும் வல்லபம் உடையவனே! நான் இந்திரன், வேண்டும் வரங்களை என்னிடத்தில் உரைப்பாயாக " என்று பகரலானான். நின்றிருப்பது இந்தி

உண்மை கனமானது ஆகவே, அதை சுமப்பவர் சிலரே.

ரன் என்பதனை அறிந்து கொண்ட அர்ச்சுனன் ''தேவர்கட்கு மன்னனே, யான் மேன்மைமிகு அஸ்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகத் தவம் புரிகிறேன். ஆகவே தேவரீர் அவற்றை எனக்கருள வேண்டும்' என்று கேட்கலானான்.

அர்ச்சுனனின் உரைகளைச் செவிமடுத்த தேவேந்திரன், ''புதல்வ. முதலில் நீ சிவபரம் பொருளை நோக்கித்தவம் புரிவாயாக. பின்னர் தேவலோகத்திற்கு வந்து நான்தரும் அஸ்திரங்களைப் பெற்றுக்கொள்'' என்று ஆசீர்வதித்து மறைந்தான். இந்திரனின் உரைகளை ஏற்றுக்கொண்ட அர்ச்சுனன் கடுமையான விதிகளை அநுஷ்டித்து, உணவு முதலியவற்றைக் குறைத்துப் பின்னர் ஆகாரம் ஏதும் புசியாமலே தவம் புரியலானான். அர்ச்சுனனின் தவத்தின் சிறப்பைக்கண்டு மகிழ்ந்த சிவபரம்பொருள் அவனுக்கு அருள் செய்யத் திருவுளம் கொண்டார்.

வேட உருவம் தாங்கிச் சிவபரம்பொருள் அர்ச்சுனன் தவம் புரிந்த இடத்தை அணுகலானார். அத்தருணத்தில் ஓர் காட்டுப் பன்றி அர்ச்சுனனைத் தாக்க விரைந்து வந்தது. அதனை உணர்ந்துகொண்ட அர்ச்சுனன் அதன்மீது பாணங்களைத் தொடுத்துப் பன்றியைத் தாக்கினான். ஆடல்வல்ல அப்பரம் பொருளான சிவபிரானும் அக்கணத்தில் ஒரு பாணத்தை அப்பன்றிமீது தொடுத்தார். இருவரினதும் பாணங்களினாலும் அடியுண்ட பன்றி இறந்தது. பன்றி மீது வேடனொருவன் 'அம்பெய்தியதைக் கண்ட அர்ச்சுனன் கோபமும் ஆச்சரியமுமடைந்தவனாய் வேடரூபத்திலிருந்த சிவனை நோக்கி ''நான் அம்பு தொடுத்த பன்றிமீது வேட்டைவரன் முறைகளைக் கடந்து அம்பு எய்த நீ யார்?'' என்று வினாவினான். அப்போது சிவபரம் பொருள் நகைப்புடன் ''எனது பாணத்தினாற்றான் பன்றி இறந்தது. அதன்மீது நீ தான் நெறிமுறை தவறிப் பாணம் தொடுத்துள்ளாய்'' என்று அர்ச்சுனனை மேலும் கோபமடையச் செய்தார். சினமடைந்த அர்ச்சுனன், சிவபிரானைப் பாணங்களினால் தாக்கலானான். தான் விடுத்த பாணங்கள் வேடனை ஒன்றும் செய்யாதிருப்பதனைக்கண்ட அர்ச்சுனன் மேலும் மேலும் அநேக பாணங்களினால் வேடரூபத்திலிருந்த சிவபிரானைத் தாக்கினான். பாணங்கள் அனைத்தும் செயலற்றுப் போய்விட்டதை உணர்ந்த அர்ச்சுனன், கத்தியொன்றினால் வேடனைத் தாக்கலானான். கத்தி முரிந்து வீழ்ந்தது. பின்னர் காண்டீபத்தை எடுத்து வேடன்மீது தொடுத்தான். அப்பெரும் அம்பையும் வில்லையும் வேடன் பறித்துத் தனதாக்கினான். இதனாற்

கஷ்டங்களைக்கண்டு அஞ்சாதே.

பெரும் ஆக்ரோஷமடைந்த அர்ச்சுனன் வேடன்மீது தாவி மற்போர் புரியமுற்பட்டான். மற்போரில் ஈடுகொடுக்க முடியாத அர்ச்சுனன் மயங்கி வீழ்ந்தான். மயக்கம் சிறிது தெளிந்ததும், சிந்தை தெளிந்தவனாய்ச் சிவபிரானைத் தியானித்தான். தியானத்தில் ஈடுபட்டதும், வேடனாக வந்திருப்பவர் சிவபரம்பொருளே என்பதைத் தெளிவாக உணர்ந்தான் உடனே பரமசிவன் பாதங்களில் வீழ்ந்து அஞ்சலித்து நின்றான்.

மகிழ்வுடன் புன்னகை பூத்தவராய்ச் சிவபிரான் '' உன்னிலும் மேன்மையான வீரனொருவன் இனி இருக்கப் போவதில்லை. உனக்கு மிகவும் அற்புதமான படைக்கலங்களை அருளச் சித்தமாக உள்ளேன். பெற்றுக் கொள் '' என்று கூறியருளினார். அர்ச்சுனன் சிவபிரானின் திருவடித்தாமரைகளில் வீழ்ந்து தன்னை மன்னித்தருளுமாறு வேண்டி இறைஞ்சினான். இறைவன் கருணைக்கடல் அல்லவா? அன்பர்களைச் சோதனை செய்வது அவரது ஆடல் நயமல்லவா? அர்ச்சுனனின் பக்தியை உணர்ந்து கொண்ட சிவபரம்பொருள் அவனுக்குப் '' பாசுபதம் '' எனும் அஸ்திரத்தையும், தான் பறித்துக் கொண்ட காண்டீபம் எனும் அஸ்திரத்தையும் அவனுக்கருளி அருள் புரிந்து மறைந்தருளினார்.

சிவபெருமானின் திவ்விய தரிசனத்தால் மனமகிழ்வு கொண்ட அர்ச்சுனன், இந்திரனின் கட்டளையை மேற்கொண்டு தேவருலகம் சென்றடைந்தான். தேவேந்திரனின் தலைநகராகிய அமராவதி நகரை அடைந்தான். இந்திரன் தனது மைந்தனாகிய அர்ச்சுனனின் வருகையால் உவகையடைந்தவனாய் அர்ச்சுனனைத் தனது பக்கலில் அமரச் செய்து கௌரவித்தான்.

அமராவதியில் இந்திரனின் விருந்தினனாக அர்ச்சுனன் தங்கியிருந்த பொழுது ஆடல் பாடல்களைக் கண்டுகளித்திருந்தான். இதனால் அக்கலைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் அவனுக்குண்டாயிற்று. சித்திரசேனன் எனும் ஆடல்வல்ல குருவிடம் அவன் அக்கலைகளைக் கற்றுக் கொண்டான். மகிழ்வுடன் அர்ச்சுனன் இந்திரனுடன் இருந்த வேளையில் ஊர்வசி எனும் தேவநடனமாது அர்ச்சுனன் மீது அன்பு கொண்டு தன்னை மணம் புரிந்து கொள்ளுமாறு அர்ச்சுனனை வற்புறுத்தினாள். அர்ச்சுனன் அவளது வேண்டுகோளை நிராகரித்தான். இதனாற் கோபமடைந்த ஊர்வசி அர்ச்சுனனைப் பேடியாக மாறும்வண்ணம் சாபமிட்டாள். இதனால் மிக்க துயரடைந்த அர்ச்சுனனுக்கு இந்திரன் ஆறுதல் கூறி அமைதிப் படுத்தி '' இச்சாபம் உனக்குப் பெரிதும் பயன்படப்

போகிறது. ஓராண்டு அஞ்ஞாத வாசம் செய்யும் போது நீ அப் பேடி ரூபத்தை எடுத்து ஊர்வசியின் சாபத்தை நிவர்த்தி செய்வாயாக'' எனவே கவலைப் பட வேண்டாம் என்று பகரலானான்.

வனத்திற்றங்கியிருந்த பாண்டவர்களும் திரௌபதியும் அர்ச்சுனன் வந்து சேராமை பற்றிக் கவலை அடைந்தனர். ஆண்டுகள் ஐந்து கடந்தநிலையில் அவன் திரும்பி வராமை அவர்களைக் கவலை கொள்ளச் செய்தது. மனச்சஞ்சலமடைந்திருந்த வேளையில் அவர்களுக்கு நாரத மகரிஷியின் தரிசனம் கிட்டியது. நாரதர் அர்ச்சுனன் தவம் பலித்து அஸ்திரங்களைப் பெற்றுத் திரும்புவான் என்று கூறி அவர்களை அமைதிப்படுத்தி விட்டுத் தீர்த்தயாத்திரையின் மேன்மைகளையும் எடுத்துரைத்து விடைகொண்டார். எனவே பாண்டவர்கள் தீர்த்த யாத்திரை செய்ய முடிபு செய்தனர். அவ்வண்ணம் புறப்படச் சித்தமாயினர். இவ்வேளையில் லோமசமுனிவர் பாண்டவர் இருக்கும் இடத்தை வந்தடைந்தார். அவருடன் பாண்டவர்கள் தீர்த்த யாத்திரையை ஆரம்பித்தனர். தீர்த்த யாத்திரையை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பதனை அறிந்த கண்ணபிரான் அவர்களைச்சந்தித்தார். பாண்டவர்கள் இருந்த நிலையைக்கண்ணுற்ற சாத்யகி, தாங்கள் துரியோதனனாதியோருடன் போரிட்டுப் பாண்டவர்களின் அரசுரிமையை மீட்டுக்கொடுக்க வேண்டும் என்று விரும்பி அதனைக் கண்ணபிரானுக்குக் கூறினான். ஆனால் கண்ணபிரான், தருமர் தர்மவழியில் நடப்பவர் அவர் தன்னாற் பெறப்படாத ராஜ்பத்தை அரசோச்ச விரும்ப மாட்டார். ஆசைப்பட்டு அறத்தைக் கைவிடும் பண்புள்ளவர் தருமர் அல்லர். எனவே அது பற்றிச் சிந்திக்க வேண்டாம்'' என்று கூறிப் பாண்டவர்களைத் தீர்த்தயாத்திரை செய்யும் வண்ணம் ஆசீர்வதித்துத் துவாரகை திரும்பினர்.

பாண்டவர்கள் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டனர். கோமுகி, முதலான புண்ணிய தீர்த்தங்களாடியபின் பத்திரி காசிரமத்தை அடைந்தனர். அங்கே பகீரதி நதியில் நீராடி விட்டுச்சில தினங்கள் தங்கியிருந்தனர்.

[ தொடரும்...

குறிப்பு: சென்றமாதக் கட்டுரையில் 15-ம் பக்கத்தில் வலப்பக்கம் 13வது வரியில் வரும் பாண்டவர்களையென்பதை, உப பாண்டவர்களெனத் திருத்தி வாசிக்கவும்.

தன்னடக்கம் தலைசிறந்த குணம்.

[ தொடர்ச்சி......



## ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்

# திருத்தல புராணம்

ஸ்ரீ சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் ஸ்ரீ

### கோயிற் காண்டம்

சிலைதனி வடிப தித்த சித்திர வேலன் தன்னை
திலைபெறு வமரர் கூடி நிதமும்பூ சித்தா ரேனும்
விலைமிகு புவியு ளாரும் மெய்ந்நெறி கொண்டு தம்மைக்
கலைதரு மறிவிற் காணும் கண்கொள வேண்டு மென்றே. 45

வழிபடு மடிய ருக்கு மருத்துவ னாவன் தீராப்
பழிபடு கொடிய ருக்கும் பத்தியி னீர்த்து ஞானச்
சுழிபடு மாறு வைப்பன் தொண்டினர் துன்ப மெல்லாம்
அழிபடு மாறு தெய்வ அருள்பெறு நெறியும் சொல்வான். 46

நல்வழி காணும் மேலோர் நயந்தரு கலைவல் லாளர்
செல்வழிப் போக்கர் சேவைச் செல்வர்கள் ஞான மார்க்கம்
சொல்வழித் தவத்தர் சித்தர் சொற்றிறம் பாத பெண்டிர்
வல்வடி வேலன் பாதம் வந்துவந் தேத்தி வாழ்வர். 47

ஆண்டுகள் பலவுமி வ்வா றம்பல வால யத்தில்
வேண்டுதல் புரிப வர்க்கு விடையவன் பாலன் அன்பு
பூண்டணி பூசை யேற்றுப் பூவர சடியிற் சோதி
தூண்டிய வேல்பி டித்துச் சுரரொடு நரரைக் காத்தான். 48

காப்பவ னீயே யென்றும் கருவினை தீர்க்கும் மாரிக்கம்
பூப்பவ னீயே யென்றும் பொன்னிலம் மக்க ளின்பம்
கோப்பவ னீயே யென்றும் குளிருமா றெழுத்தொ டங்கை
கூப்புவ ரின்ன றீர்த்துக் குமரவேள் கொலுவி ருந்தான். 49

திருவுளங் கொண்ட கந்தன் சித்துசத் தானந் தத்தேன்
பெருகுதம் பாதம் பேணும் பெருந்தகை யாக வாழ்ந்த
தருமனப் பரதர் கூட்டத் தலைவனை வசப்ப டுத்தி
வருவினை யாடல் பூண்ட வகையினிச் சாற்ற லுற்றேன். 50

[ தொடரும்......

அன்பு நோக்குடையார்க்கு எல்லாம் இன்பமயம்.

உ

# திருத்தல புராணம்

## கோயிற் காண்டம்

உட்கருத்து :

45) செல்வச் சந்நிதித் தலத்திலே ஒரு கற்பாறையிலே, தனது திருவடிச்சுட்டைப் பதித்து ( கதிர்காமம் ) சென்றாராம் ( கோயில் அருகே ஒரு கல்லில் சிறுகுழந்தையின் அடிச்சுவடும் ஆனையின் அடிச்சுவடுயிருந்ததாகவும் திரு விழாவின் முன்னும் - விழாபூர்த்தியான பின்பும், பூசகர்கள் அந்த அடிச்சுவட்டைப் பூசித்து வந்ததாகவும் அறிகிறோம் ) இவ்விடத்தில் தேவர்கள் வந்து வந்து பூசித்துச் செல்வர். இந்த அற்புதத்தை உலக மக்களுக்கு – அறிவால் அறியும் மெய்ந் நெறியாளருக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று முருகன் திருவுளம் கொண்டார்.

46) அங்கே வழிபட வருகின்ற அன்பர்களுக்கு முன்னே சாதாரண மனித வடிவில் தோன்றி, நோய் தீர்க்கும் வைத்தியனாகவும் பக்திக்கதை சொல்லும் ஞானியாகவும் - கவலை தீர்க்கும் தெய்வீக சித்தராகவும் தோற்றம் தருவார்.

47) பற்பல சித்திகளைக் கேள்வியுற்ற கலைஞர்கள், வழிப்போக்கர், ஞான மார்க்கம் விரும்பும் தவம் படைத்தவர்கள், கற்பு மிக்க பண்பான பெண் குலத்தவர்கள் ஆகிய பலரும் இத்தலத்தை தரிசிப்பதற்காக வருவார்கள்.

48) இங்கே வேல்பிடித்த பெருமான், தேவர்களுக்கும் மனிதருக்கும் நல்லருள் புரியும் தெய்வமாக விளங்கினான். பூவரசமரத்தடியில் விளங்கிய அம்பலக் குடிசையில் அப்போது கோயில் இருந்தது.

49) முருகா, நீயே எம்மைக் காப்பவன், நீயே பிறவிப்பிணி தீர்ப்பவன், பூமி மனை மக்கட்செல்வம் எல்லாம் தருபவன் நீயே, என்று பக்தர்கூட்டம் தினமும் வந்து ஓம் சரவணபவ என்ற ஆறெழுத்தைச் செபித்து வழிபாடு செய்ய, அவரவர் வேண்டும் வரம் கொடுத்து குமரப்பெருமான் கொலு விருப்பார்.

50) பல ஆண்டுகளாக - பற்பலர் பூசை செய்து வந்தனர். ஆயினும், பரதர் குலத்துப் ( மீன் பிடிக்கும் தொழிலாளர் ) பக்தன் ஒருவனை முருகன் தம் வசப்படுத்தி - அன்னானின் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தி, அவரைத் தமது பூசகராக்கிய வரலாற்றை இனிச் சொல்லுவாம்.

உ

உற்சவம் **2000**

## 25-08-2000 இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

[ தொடர்ச்சி...

125) திரு. சபா. இரத்தினசிங்கம் - சபா றேடர்ஸ்,
அச்சுவேலி 500 00
126) திரு. ச. விநாயகமூர்த்தி - கரவெட்டிமேற்கு 1000 —
127) திரு. க. சோதிப்பெருமாள் - இணுவில் 500 ...
128) திரு. த. விமலேஸ்வரன் - மாவிசந்தி, அல்வாய் 1000 ...
129) திரு. S. நவரெத்தினம் - விஜய்சில்க், யாழ்ப்பாணம் 1000
130) திரு. து. பிறேமச்சந்திரன்-நவாலிவீதி ஆ. கோட்டை 200 —
131) திரு. நா. தெய்வேந்திரன் - இந்திராகபே, நெல்லியடி 3000 —
132) பொன். பூலோகசிங்கம் - கொக்குவில் 500 ..
133) திரு. இ. லவநேசன் - காரைநகர் 200
134) திரு. இ. புவனேந்திரன் - கோவில்வீதி, நல்லூர் 500 ...
135) ஸ்ரீநதியா ஆபரண மாளிகை - யாழ். 2000
136) திரு. வைத்தியலிங்கம் - அன்சன்ஸ், யாழ்ப்பாணம்
1 மூடை அரிசி
137) திரு இ. சிவசங்கர் - கைலாசவாசா, திருநெல்வேலி 500
138) திரு. ஐ. சிவநாதன் - ( மருதம் ) நெல்லியடி 3 மூடை அரிசி
139) திரு. இ. புவனேந்திரன் - ( பிள்ளையார் ) நெல்லியடி
2 மூடை அரிசி
140) திருமதி ம. நாகேஸ்வரி - நவிண்டில் 2000 —
141) திரு. N. இராஜகோபால் - புதுத்தோட்டம், துன்னாலை
1000 —
142) செல்விகள் ராமலிங்கம் சகோதரிகள் - பிரப்பங்குளம் வீதி,
யாழ். 2 மூடை அரிசி
143) திருமதி சி. மகேஸ்வரி உடுப்பிட்டி 1000 ...
144) திரு. T. தியாகராஜா P. M. - திருகோணமலை 1000 —
145) திரு. வே. பாண்டியன் - கைதடி 1000 ...
146) திரு. இராசேந்திரம், தர்மகுலசிங்கம் - சாவகச்சேரி 1000 —
147) திரு. ந. நவரூபராஜா - வல்வெட்டி 1000 ...
148) திரு. ந. மணிதரன் - மாயவா தொலைத் தொடர்பு நிலையம்
வல்லிபுரக்குறிச்சி 1 மூடை அரிசி
149) ஜெகா மோட்டோஸ் - நெல்லியடி 1 மூடை அரிசி
150) திரு. T. இராசகுலநாயகம் - கைதடி 1000 —

கொள்கையைக் கைவிடாதவன் நேர்மையாளன்.

151) திரு. S. செல்வலிங்கம் - கொழும்பு 2000 ...
152) திரு. வீ இராசையா - வதிரி 1000 ...
153) திரு. கோ. கண்ணதாசன் வைஷ்ணவி - நகைப்பூங்கா, நெல்லியடி 500 ...
154) திருமதி அ. குணநாயகம் - திருநெல்வேலி 3000 ...
155) திரு. ஐ. கோடீஸ்வரன் - திருநெல்வேலி 1200 ...
156) திரு. வே. ஐயம்பெருமாள் - இ. வங்கி. யாழ். 500 ...
157) திரு. K. V. மூர்த்தி - கொழும்பு – 6 5000
158) திரு. ச. இராஜேஸ்வரன் - கரந்தன் 1000 ..
159) திரு. பொ. குமாரசாமி - சட்டத்தரணி, நவிண்டில் 1500 ...
160) திரு. வே. சுவாமிநாதன் - இடைக்காடு 1000 ...
161) திரு. சொர்ணலிங்கம் இராசம்மா 3000 ...
162) திரு. ந. மணிவண்ணன் - இரும்புமதவடி, வதிரி 5000 ...
163) திரு. சி. மகாலிங்கம் - மலையன் தோட்டம், கரணவாய் 1000 ...
164) திருமதி தி மகேஸ்வரன் - யாழ்ப்பாணம் 1000 ...
165) பாக்கியரெட்ணம் - இரும்பகம், சங்கானை 2000
166) மாவடிப் பிள்ளையார் ஆலய அடியார்கள் - மீசாலை 1 மூடை அரிசி
167) திரு. க. விக்னேஸ்வரன் - வீரகத்திப்பிள்ளையார் கோவில் வீதி, உடுப்பிட்டி 1000 ...
168) ப. நோ. கூ. சங்கம் - அச்சுவேலி 1 மூடை அரிசி
169) வேணி களஞ்சியம் - யாழ்ப்பாணம் 50kg உ. கி. 1 மூடை அரிசி
170) திரு. ச. தர்மலிங்கம் V. V. T. 1000
171) திரு. பொன் பூலோகசிங்கம் - கொக்குவில் 1 மூடை அரிசி 25 தேங்காய்
172) திரு. மு. கணேசு - இணுவில் 1 மூடை அரிசி 5 மூ. பருப்பு
173) திரு. வே. சிவராமலிங்கம் - திருநெல்வேலி கிழக்கு 2000 ...
174) திரு. அ. இராசேந்திரம் - இமையாணன் வடக்கு 500 ...
175) திரு. இ. சிவகுமார் - கரணவாய் மத்தி 250 ...
176) திரு. ஐ. வேலுப்பிள்ளை - கரணவாய் மத்தி 250 ..
177) திரு. M. கந்தசாமி - கோவில் வீதி, நல்லூர் 3000
178) திரு T. பாலசுப்பிரமணியம் மூலம் திருமதி இன்பமலர் - கொழும்பு 5000 ...
179) திருமதி மலர் - சந்தனத்தரை, உடுப்பிட்டி 1500 ...
180) திருமதி பவானி தர்மலிங்கம் குடும்பம் - வவுனியா 5000 ...
181) திரு. இ. ஜெயக்கொடி - கனடா 3900 ...
182) திரு. ஐ. பரம்சோதி - யாழ். 1 கேஸ் பால்மா
183) திரு. சி. நாகலிங்கம் - கரணவாய் 500 ...

துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்.

148) ஸ்ரீநதியா நகைமாடம் - யாழ். 2000 00

185) திரு. T. தியாகலிங்கம் S. V. M. யாழ். 1 மூடை அரிசி

186) திரு. P. T. பாலச்சந்திரன் - அவுஸ்திரேலியா 2000 ...

187) செல்லமுத்தூஸ் புடவையகம்
கண்டி பற்றிக்சென்றர் } நெல்லியடி . 4 மூடை அரிசி

189) திரு. ஆ. விநாயகமூர்த்தி - சாளம்பை,
கரணவாய் மத்தி 1000 ...

190) திரு. மு. குணரெத்தினம் - குரும்பசிட்டி 1000 —

191) திரு. சி. கந்தவனம் - இமையாணன் 500 ...

192) திரு. A. S. பொன்னம்பலம் — இணுவில் 200 ...

193) திருமதி வே. பூரணம் - ஜெர்மனி 2000 ...

194) திரு. S. மகாலிங்கம் — கரவெட்டி 500 ...

195) திரு. பொ. பற்குணராசா — மயிலங்கூடல் 1000 —

196) திரு. ச. கணேசதாசன் - J. P. உடுவில் 1000

197) திரு. வே. கணபதிப்பிள்ளை 1000 ...

198) திரு. வேணுகோபால் - யாழ்ப்பாணம் 1000 ...

199) திரு. பொ. தங்கராசா - கோயிற்கடவை,
கரவெட்டி 10,000 ...

200) திரு. ரவிக்குமார் குடும்பம் - உரும்பராய் வடக்கு 1000 —

201) திரு. மகிந்தன் - ஆடியபாதம் வீதி 500 ...

202) நோதேன் மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம் 1000 ...

203) திரு. ஏ. அனுசாந்தன் - குப்பிளான் 1500 ...

204) திரு. இணுவில் ஸ்ரீ 500 ...

205) திரு. திருநாவுக்கரசு - இலங்கை வங்கி, சுன்னாகம் 500 ...

206) திரு. க. ஜெகநாதன் - சுழிபுரம் மேற்கு. 500 ...

207) திரு. சு. இராசலிங்கம் - சங்கானை 500 ...

208) திரு. த. இரத்தினசிகாமணி — குரும்பசிட்டி 1000 ...

209) திருமதி பா. ஜெயந்தாதேவி - கல்வித்திணைக்களம்
யாழ். 1001 ...

210) திரு. சு. வன்னியசிங்கம் - கரணவாய் வடக்கு 1000 ...

211) திரு. பரஞ்சோதி குடும்பம் 200 ...

212) திரு. கு. வேலாயுதம் 200 ...

213) திரு. தி. துரைரத்தினம் 1000 ...

214) திரு. சி. விதுஷணசர்மா - நாகர்கோவில் 1000 ...

215) அன்பர் 600 —

216) திரு. K. ஆறுமுகநாதன் - வட்டுக்கோட்டை 1000 —

217) செல்வி T. வானதி பிரப்பங்குளம் வீதி, யாழ். 3600 —

218) அன்பர் 1500 ...

குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்.

219) திரு. ஆறுமுகசாமி இராசா கொட்டேனா

கொழும்பு 2 மூடை அரிசி

220) திரு. R. கண்ணன் - V. M. றோட்,

பருத்தித்துறை 1 மூடை பருப்பு

221) செல்வி நளினி, உடுப்பிட்டி 1000 00

222) Dr. உதயசீலன் - கொடிகாமம் 1000 ...

223) ஸ்ரீநதியா நகைமாடம் - யாழ். 2000 ...

224) சுசீலா நகைமாடம் - பருத்தித்துறை 1 மூடை அரிசி

225) திருமதி தி. இராசம்மா - மூத்தவிநாயகர் கோவிலடி,

கரணவாய் மத்தி 2000 ...

226) திரு. சரவணை தேவராசா கைதடி 1000 ...

227) திரு. வே. கணேசமூர்த்தி - மாத்தளை 5000 ...

228) திரு. ம. ஸ்ரீகாந்தா - அச்சுவேலி 1000 ...

229) Dr. K. சிவஞானசூரியர் - கொழும்பு 5000 ...

230) திரு. யோ. சசிதரன் - மீனபவனம், நெல்லியடி 1000 ...

231) திருமதி பார்வதி இராமநாதன் - கரணவாய் மத்தி 2000 ...

232) திரு. ஐ. இராமச்சந்திரன் - மட்டுவில் 1000 ...

233) திருமதி நாகேஸ்வரி - கிராமக்கோட்டடி பருத். 500 ...

234) திரு. A. S. S. இராமச்சந்திரன் - மாலி சந்தி

அல்வாய் 5000 ...

235) திரு. க. கிருஸ்ணபிள்ளை J. P. - ஆவரங்கால் 1000 ...

236) திரு. சி. கணேசமூர்த்தி - அல்வாய் 1000 ...

237) திரு. சி. மயில்வாகனம் - சுதுமலை வடக்கு 1000 ...

238) சுசீலா நகைமாடம் 2000 ...

239) திரு. பா. குகன் - பருத்தித்துறை 2 மூடை அரிசி 500 ...

240) திரு. K. கனகசபேசன் மூலம் கனடா அன்பர்கள் 24700 ...

241) வேணி களஞ்சியம் 1 மூடை அரிசி 1 மூடை உ. கிழங்கு

242) திரு. ந. இராசரத்தினம், - நாகம்ஸ் சுன்னாகம் 1000 ...

243) திரு. ச. சற்குணராசா - அல்வாய் கிழக்கு 2000 ...

244) திரு. கந்தையா சர்வானந்தம் மூலம்

சர்வானந்தம் ஜீவலதா - நவக்கிரி 5000 ...

245) விஸ்ணுசுந்தரம் சிவஞானசுந்தரம் V. V. T. (லண்டன்) 50 பவுண்

246) திரு. வீ. சி. சிவநாதன் - இ. வங்கி பருத்தித்துறை 1000

247) திரு. S. K. குருபரன் - கைதடி 1 மூடை அரிசி

248) ஸ்ரீ நதியா நகை மாடம் 2000 ...

249) பாலசுந்தரம் மூலம்

பவளரத்தினம் சந்திரசேகரம் - அரியாலை 10,000 ...

[ தொடரும் .....

தீய எண்ணங்கட்கு தோற்றுவாய் அறியாமையாகும்.

உ

# கற்றவர் விழுங்கும்..

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி — ஆன்மீக — தெய்வீகக் கல்வியைக் கற்றவர் பழத்தை விழுங்குவது போல் சிவபெருமானைத் தம்முள்ளே விழுங்கித் தமக்கு உரிமையாகத் தம்முடனே — தாமாகவே ஆக்கி விடுகின்றனர். — உயிரின் கசடைப் போக்கி உயிரைச் சிவமயமாக்கவல்ல கல்வியைக் கற்பவர் கற்றாங்கு ஒழுகிச் சிவமாகின்றனர். அப்படிப் பட்டவருள்ளே இன்பம் செய்யும் கனியாக விளங்குகின்றார் சிவபெருமான் கற்பக மரம் நினைத்த பொருளைக் கொடுக்கும் தெய்வீகத் தன்மை உடையது. கற்பகக் கனியோ கற்பக மரத்தைத் தரவல்லது

அமிர்தமானது உணவாக அமைந்து பசியைப் போக்கும் அதே சமயம் மரணமற்ற தன்மையையும் கொடுப்பது போன்று கற்பகக் கனி இனிய உணவாக இன்பம் செய்வதோடு அமையாது உண்டவரைக் கற்பக விருட்சம் போலவே தம்மை அண்டியவர் தேவைகளை நிறைவு செய்யவல்லராயிருப்பர் என்பதை உணர்த்துதற்காக கற்பகக்கனி என்றார். திராட்சைப் பழத்தை முழுமையாக விழுங்குவது போல், கற்பகக் கனியை விழுங்குவதால் மட்டுமே கற்பக விருட்சமாகும் நிலை சாத்தியமாகுமாதலால் கற்றவர் உண்ணும் கற்பகக் கனி என்னாது கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி என்றார். உண்மை கல்வியின் பயனும் கற்றபின் கல்வியின் முழுப்பயனையும் அடைபவர் சிவமே ஆவர் என்ற தத்துவத்தை இலக்கிய வடிவில் விளக்கும் தன்மை கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி எனச் சிவபெருமானை வணங்குகின்றார்.

கரையிலாக் கருணை மாகடல் — தொடர்புடையாரிடத்தே தோன்றும் அன்பு தொடர்பு கருதாது அனைவரிடமும் தோன்றும் போது கருணை எனப்படுகின்றது. தொடர்புடையாரிடத்து அன்பு செலுத்துபவர் தம் ஆற்றலுக்கு ஏற்பவே நன்மை செய்ய முடியும். சிவபெருமானோ வரம்பிலாற்றல் உடையவராய் இருந்து உயிர்களுக்கு இதம் செய்கின்றபடியால் கருணைமாகடல் என்றார். கருணையும் வரம்பிலாற்றலும் உடைய

வராய் இருக்கும் அதேசமயம் தகுதி உடைய ஆன்மாக்கள் தகுதியில்லாத ஆன்மாக்கள் என்ற வேறுபாடு பாராது எல்லா ஆன்மாக்களுக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ற அருள்புரிதலினால் கரையிலாக் கருணைமாகடல் என்றார் தகுதி பெறாத உயிர்கள் தமக்குச் சிவபெருமான் அருள்வதை அறியாதிருக்கின்றன என்பதேயன்றிச் சிவபெருமான் உயிர்கட்கு இரங்கி அருள்வதில் வரையறை செய்வதில்லை என்பதைத் தெளிவாக்கவே கரையிலாக்கருணை மாகடல் என்றார்.

மற்றவர் அறியா மாணிக்க மலை — பெறுமதி — ஒளி — பயன்பாடு என்பவற்றில் மதிப்பீடுகளுக்குள் அடங்காதவர் சிவபெருமான் என்பதை உணர்த்த மாணிக்க மலை என்று குறிப்பிடுகின்றார். உலகமுழுவதையும் விளக்கித் தானும் பிரகாசமாக விளங்கும் சூரியனைப் பிறவிக் குருடரும் இருளை மட்டும் அறியும் ஆந்தைபோன்றவரும் அறியாதிருப்பது போன்று மனமயக்கத்தில் அகப்பட்டுத் தம்மைத் தாம் அறியாது தம் உடலைத் தாம் எனமதிக்கும் இயல்பினை உடையவர் சிவபெருமானை அறிய மாட்டார் என்பதைக் குறிக்கவே மற்றவர் அறியா மாணிக்கமலை என்றார். ஒருவரின் வீட்டிற் பாதுகாப்பாக உள்ள மாணிக்கமணியைப் பிறர் அறியாதிருந்தால் அது அறியாதவரின் குற்றமன்று ஒளியும் பெருமையும் பெறுமதியும் மிக்க மாணிக்க மலையாக — எல்லாராலும் எளிதிற் காணத்தக்கவாறு இருக்கும் போது அதை ஒருவர் காணவில்லை என்றால் அது காணதவர் குற்றமேயன்றி மாணிக்கமலையின் குற்றமன்று என்பார் மற்றவரறியாமாணிக்க மலை என்றார்.

மதிப்பவர் மனமணி விளக்கு — எண்ணெய் விளக்கிற்கு எண்ணெய் குறையாதிருக்க வேண்டும் அவ்வப்போது திரி தூண்டப்பட வேண்டும் காற்று வேகமாக வீசாதிருக்கவேண்டும் மணிவிளக்கிற்கு இக் குறைபாடுகள் இல்லை. சிவபெருமான் மாணிக்க மலையாக இருந்தாலும் காண இயலாதவர் காணாதே உள்ளனர். ஆனால் மாணிக்கமலையாக உள்ள சிவபெருமானை பேணித் தியானிப்பவர் உள்ளத்திற் குளிர்ச்சியான ஒளியைச் செய்து கொண்டிருக்கிறார். சூரியன் உலகிற்கு ஒளி செய்கிறார் இறைவனோ உலகிற்கு ஒளி செய்யும் மலையாக உள்ளது மட்டுமன்றி உயிர்க்குயிராக உள்ளமெனும் கோயிலை விரும்புபவராக உள்ளதனால் மதிப்பவர் மனமணி விளக்கு என்றார்.

செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவன்:- சிவபெருமான் முப்புரங்களை எரித்த செய்தியிற் பல தெய்வீக உண்மைகள் உள்ளன. தன்னை எதிர்த்த -மறுத்த

சந்திரன் சூரியனோடு ஒடுங்குதல் — அமாவாசை.

அசுரர்களைச் சிவபெருமான் அசுரர்களை அழிக்காது அவர்களது பகை உணர்ச்சிக்கு அடிப்படையாகஇருந்த முப்புரங்களை மட்டுமே சிவபெருமான் சிரித்து எரித்தார்.

முப்புரமாவது மும்மலகாரியம் என்றபடி மும்மலங்களையும் அழிப்பவர் சிவபெருமான். சகல சீவதயாபரராகிய சிவபெருமான் உயிர்களுக்காகப் பஞ்சகிருத்தியம் செய்தலேயன்றி உயிர்களை அழித்தொழிப்பவர் அல்லர். பஞ்சகிருத்தியத்தில் உள்ள சங்காரமாவது தனுகரண புவன போகங்களை அழிப்பதே அன்றி உயிர்களை அழிப்பதன்று. சிவபெருமான் செய்யும் சங்காரமும் உயிர்களிடத்து வைத்த கருணை நிமித்தமானதேயாகும். இவ்வுண்மையை வெளிப்படுத்தும் வகையிலேயே செற்றவர் புரங்கள் செற்ற என்ற சொல்லாட்சி உள்ளது

திருவீழிமிழலை வீற்றிருந்த கொற்றவன் — புண்ணியத்தலங்கள் ஒவ்வொன்றிலும் அருள் பெற்றோர் வரலாறுகள் பல இருக்கும் திருவீழிமிழலைக்கும் இப்படியான பல வரலாறுகள் உண்டு.

திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்த போது ஒருமலர் குறையத் தன் கண்ணையே மலராக அருச்சித்து சக்கரம் பெற்றமை. திருமால் வைகுண்டத்திலிருந்து ஆலயம் கொணர்ந்து அமைத்தமை. ஒரு முனிவரின் மகளைச் சிவபெருமான் திருமணம் செய்து 'மாப்பிள்ளைச் சுவாமி' என்ற பெயருடன் விளங்குதல், அப்பருக்கும் சம்பந்தருக்கும் படிக்காசு கொடுத்தமை. அப்பருக்கு வாசியில்லாத காசு கொடுத்தும் சம்பந்தர் பதிகம் பாடியபின் சம்பந்தருக்கும் வாசியில்லாத காசு கொடுத்தமை.

இப்படியான வரலாறுகளின் அடிப்படையில் அருளரசராகச் சிவபெருமான் திருவீழிமிழலையில் விளங்குவதால் திருவீழிமிழலை வீற்றிருந்த கொற்றவன் என்றார்.

கண்டு கண்டு உள்ளம் குளிரக் கண்குளிர்தல் — சிவதரிசன மகிமை — பயன் என்பன கூறப்படுகின்றன. ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆதாரமாகக்கொண்டு சிவபெருமான் பூசை வழிபாடுகள் ஏற்று அருள் புரிகின்றார். உயிரற்ற மனிதனின் உடலைப் பார்ப்பதற்கும் உயிருள்ள மனிதனைப் பார்ப்பதற்கும் உள்ள வேறுபாடு போல் பிரதிஷ்டை செய்து பூசிக்கப்படும் விக்கிரகத்திற்கும் விற்பனைக் கெனக்கடையில் இருக்கும் விக்கிரகத்திற்கும் வேறுபாடு இருக்கும். உயிருள்ள ஒருவனும் தனக்கு பிரியமானவர்களுடன் பழகும் போது ஊக்கத்துடனும்

விரும்பிய பொருள் — காமியம்

மகிழ்ச்சியுடனும் பழகித்தானும் இன்புற்றுத் தன்னுடன் பழகுப வரையும் இன்புறுத்துவான். இதேபோல் அன்பர் அடியார் தரிசிக்கும் போது வழிபடும் போது இறைவன் விசேடமாக வெளிப்பட்டு அருள்வார். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே கண்டு கண்டு உள் ளம் குளிர்தல் உண்டாகின்றது. சிவதரிசனத்தால் முதலில் உள் ளம் குளிர்கின்றது. அதன் விளை வாக அத்தரிசனத்தைப் பெற்ற கண்ணும் குளிர்ச்சியின்பத்தை தரிசன இன்பத்தைப் பெறுகின் றது. உள்ளம் குளிர்தலும் அத னாற் கண் குளிர்தலும் மிக வேகமாக நிகழ்வதால் மேற் போக்காக நோக்கும் போது முதலில் கண் குளிர்ந்து பின் உள் ளம் குளிர்வது போலத்தெரிவ தும் உண்டு.

தாமரை — சந்திரன் — சூரிய உதயம் போன்ற காட்சி களால் வழக்கமாக மகிழ்ச்சிய டைபவன் தனக்கு மிக இனிய ஒருவரின் மரணத்துன்பத்தினாற் பாதிக்கப்பட்டிருக்கும் போது தனக்கு விருப்பமான காட்சி களால் மகிழ்ச்சியடைவதில்லை. உள்ளம் கவலையில் தோய்ந்தி ருப்பதால் கண்ணுக்கு மட்டும் காட்சி கிடைக்கும்போது கண் காட்சியின்பத்தைப் பெறுவ தில்லை. இதிலிருந்து காட்சி யால் உள்ளம் குளிர்ந்தாலே கண்ணும் காட்சியின்பத்தால் இன்புறும். இவ்வுண்மையினை வற்புறுத்தும் தன்மையிலேயே கண்டு கண்டுள்ளம் குளிர என் கண் குளிர்ந்தனவே என்ற தொடர் உள்ளது.

---

ஆண்டவனின் பெயரைக் குழந்தைகளுக்கு வைத்து அழைக்கும் போதெல்லாம், நமக்குக் கடவுளின் நினைவு வருகிறது. கடவுளின் பண்புகளும் நமக்கு நினைவுக்கு வருகின்றன. அதற்குரிய பலன் நமக் குக் கிடைக்கிறது. எந்தப்பெயரால் நாம் குழந்தையை அழைத் தாலும் அழைப்பது குழந்தையைத்தான். ஆனால் ஆண்டவனையே அழைப்பது போன்ற மனப்பாங்கு நம்மை உயர்த்தி விடுகிறது. இந்த உயர்ந்த அனுபவம் கிடைக்கத்தான் கடவுளின் பெயரைக் குழந்தைகளுக்கு வைக்கிறோம். கடவுளின் பெயரினால் குழந்தை களை நாம் அழைக்கும் போது குழந்தைகளின் மனநிலையிலும் நல்ல பண்பு மிளிர்கின்றது.

---

மந்திரம் உச்சரிக்கப்பெற்ற நீர் — தர்ப்பணம்

உ

# சந்நிதியே சரணம்

> வ. சிவநேசன் <

### காப்பு

வல்லைப் பெருவெளியில் அல்லல் வினைதீர்த்து
கல்நெஞ்சம் கரைக்கவல்ல கணபதியே — என்நெஞ்சில்
என்றும் உறைந்திருந்து என்உள்ளம் மலரவைக்கும்
சந்நிதியான் அருட்புகழை அழகுற நீபேசவை.

### பாடல்

சந்நிதியே சரணென்று வந்து தொழுமடியார்
முன்தோன்றும் வாயிற் பெருங்காட்சி — கண்குளிரக்
கதிர்வேலாய் ஒளிபரப்பக் கலாபம் நடனமிட
அருட்சேவல் சிறகொடியக் கூவும் பதி.

ஆறுபடைப் பெருங்காட்சி மண்டபத்தை அலங்கரிக்க
அடியவர்கள் பாடல் செவிநிறைக்க — நாதமிளிர்
பெரும்பறையின் பேரொலியால் அண்டம் அதிர்வடைய
நாதமணி நடனமிடும் சந்நிதியாம் பதி.

ஆதிமூலத்தில் அருள் ஞானவேல் விளங்க
அருட்காட்சிதனைக் கண்டு அன்பர்மனங்குளிரச் - சந்நிதியில்
வாய்கட்டிப் பூசைசெய்யும் வழிவந்த பூசகர்கள்
நீறிட வினையாவும் நீறும் புனிதப்பதி.


நாவல் அறிவென்பர் நவலோ நாவலென்பர்
பூர்வீகப் பெருநாவல்சேர் வேலவனார் - அருள்வழங்க
எழுந்தருளும் வேளையிலே ஔவைதனை நினைந்தோ
அருட்தீபங் காட்ட அருட்காட்சி காட்டும்பதி.

கங்கைக் கரையோரம் அருட்கனலாய் விளங்கி
மதநீர்பாய் மாணிக்கப் பிள்ளையெனச் - சந்நிதியில்
மாணிக்கப் பிள்ளைக்கு முன்னாகத் தடம்சேர
அன்பர்கட்கு இன்பருளும் இபமுகனார் வாழும்பதி.

[தொடரும் ....

# சந்நிதியான்

ந. அரியரத்தினம்



தும்பளை தெற்கு தும்பளை என்ற முகவரியில் வாழ்ந்து வரும் திரு. வீரகத்தி வடிவேல் அவர்களுக்குத் தற்பொழுது வயது 66 களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஓர் அன்பர்

தனக்கு அறிவு தெரியத் தொடங்கி ஆலய வழிபாடு செய்ய ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை சந்நிதியானுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்து வருகின்றார்.

ஆலயத்திற்கு நடந்து சென்று வழிபாடு செய்தலே சாலச்சிறந்தது என்று அறிவுரை கூறுகின்ற யோகர் சுவாமிகளினது கருத்திற்கிணங்கத் தும்பளையிலிருந்து நடந்து வந்து சந்நிதியானைத் தரிசிக்கும் வழக்கத்தை இளமைக் காலத்திலிருந்து திரு. வீ. வடிவேல் அவர்கள் முடிந்தவரை கடைப்பிடித்து வருகின்றார்கள்.

கல்வி கற்கும் காலத்திலும் அரச ஊழியராகத் தூரஇடங்களில் வேலை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்ட காலங்களிலும் தற்பொழுது ஓய்வுபெற்று வாழ்ந்து வருகின்ற காலத்திலும் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் எது நடந்தாலும் அது சந்நிதியானின் திருவருளே என்றும், அவனது பாதங்களைப் பணிவதனூடாகத் தான் தனக்கு நிம்மதியும் மனநிறைவும் ஏற்படுகின்றன என்ற நிலையில் வாழ்ந்து வருபவர் திரு. வீ.வடிவேல் அவர்கள்.

நிற்பதும் நடப்பதும் நின் செயலாலே நினைப்பதும் நிகழ்வது நின்செயலாலே........... என்று தொடருகின்ற பக்திப் பாடல் வரிகளில் வருவது போன்று எல்லாம் கலியுகக்கந்தன் திருவருட்படியே நடக்கின்றன என்ற நம்பிக்கையுடன் சந்நிதி முருகனை மனத்தில் நிறுத்தி வாழ்ந்து வருகின்ற ஒரு அன்பரே திரு. வீ. வடிவேல் அவர்கள் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இத்தகைய இயல்புள்ள திரு. வடிவேல் அவர்களுக்கு அண்மையில் அடிவயிற்றில் மிகப் பலமாகக் குத்துகின்ற ஒரு வியாதி ஆரம்பித்தது. இந்த வயிற்றுக்குத்து மிகவும் கடுமையானதாகவும், தாங்க முடியாத அளவு வேதனையையும் கொடுத்ததனால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்றார். அங்கே அவருக்குச் சகலவிதமான பரிசோதனைகளும் செய்யப்பட்டன. பரிசோதனையில் கல்சியக்கல்லு சலப்பையில் இருப்பதாகக்கூறிய வைத்தியர்கள் அந்தக்கல்லு இருக்கும்வரை வயிற்றில் குத்து இருக்குமெனவும் ஆகவே அந்தக் குத்தைக் குணப்படுத்த வேண்டுமானால் சத்திரசிகிச்சை செய்து கல்லை எடுப்பதுதான் ஒரேவழி எனவும் ஆலோசனை கூறினார்கள். மாற்று வழி இல்லாத நிலையில் சலப்பையில் உள்ள கல்லைச் சத்திர சிகிச்சை செய்து எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்குரிய திகதியும் 31 - 12 - 1999 எனக் குறிக்கப்பட்டது.

சந்நிதி ஆலயத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் பஜனைக் குழுவில் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து பஜனை பாடுதல், சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி மாதம் தோறும் வரும் பௌர்ணமித்தினத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாசக முற்றோதலில் தானும் தவறாது பங்கு கொண்டு தனது இறை பணியை நிறைவேற்றுதல் போன்ற கைங்கரியங்களை நிறைவேற்றிவரும் திரு. வடிவேல் அவர்கள் தனக்கு இடம்பெற இருக்கின்ற சத்திரசிகிச்சையைப் பற்றிச் சிந்தித்த அதேநேரம் கடந்த காலங்களில் ஏற்பட்ட சில நிகழ்வுகளையும் ஒரு முறை மனத்தில் மீட்டுப்பார்த்தார்கள்.

1989 ஆம் ஆண்டு திரு. வடிவேல் அவர்கள் வவுனியாவில் விவசாயக் களஞ்சியப் பொறுப் பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அந்நிய இராணுவமான இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம் மிகவும் மிலேச்சத்தனமான முறையில் யார், எவர் என்று சிந்தியாது அனைத்துத்தரப் பினரையும் தாக்குவது அவர்களது பொது வான இயல்பு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைத்தியர் கள், தாதிகள், நோயாளர்கள், சிறுவர்கள் என்று பார்க்காமல் வைத்தியசாலைக்குள்ளேயே அனைவரையும் சுட்டுப்பொசுக் கிய சோக நிகழ்வை நாம் இல குவில் மறக்க முடியுமா?

இவ்வாறான இயல்புள்ள இந்திய இராணுவத்திற்கு வவுனி யாவில் ஒருமுறை ஆத்திரமூட் டும் நிகழ்வு ஒன்று இடம் பெற்றது. அந்தச்சமயத்தில் வவுனியா வைத்தியசாலை அதி காரியைச் சுட்டுக்கொன்றதுடன் பலரையும் தாக்கிச் சித்திரவதை செய்யும் செயற்பாட்டிலும்அவர் கள் ஈடுபட்டனர்.

அந்தச்சமயத்தில் வவுனியா வில் களஞ்சியப் பொறுப்பாள ராகக் கடமையாற்றிக் கொண்டி ருந்த திரு. வடிவேல் அவர்களும் இந்திய இராணுவத்தின் கை களில் அகப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு அவர்களி டம் அகப்பட்ட நிலையில் அவ ருக்கு முதலாவது அடிவீழ்ந்தது. தொடர்ந்து இரண்டாவது அடி யும் வீழ்ந்தது. அடியை அவரால் தாங்க முடியவில்லை. அது மட்டு மல்ல அவர் நிலைதடுமாறி. அவ ரது நினைவு மறைய ஆரம்பித் தது இந்த நிலையில் மூன்றாவது அடியை எதிர்கொள்ள முடி யாது அவரது உள்ளம் ஆபத் பாந்தவனாகிய முருகப்பெரு மானை நினைத்து முருகா...... சந்நிதி முருகா.. என்று கத்தி னார். அவருக்கு அடிப்பதற்கு ஓங்கியவருடைய கையில் இருந்த பொல்லு கூரையில் தடக்கியது. வடிவேல் அடியில் லாது தப்பிக் கொண்டார் அது மட்டுமன்றிப் பின்பு அவருக்கு எந்தவிதமான சிறிய சித்திர வதையும் இடம்பெறாமற் காப்பாற்றப்பட்டார்.

மேற்படி சம்பவத்தை நன் றிப் பெருக்குடன் உள்ளத்தில் மீட்டுப்பார்த்த திரு. வடிவேல் அவர்கள் தற்பொழுது சத்திர சிகிச்சை செய்வதற்கு வைத்திய சாலைக்குச் செல்வதற்கு முன்பு எப்படியும் சந்நிதியானிடம் சென்று அவனை வழிபட வேண் டுமென்று அவரது உள்ளம் திரும்பத் திரும்பச் சிந்திக்கத் தொடங்கியது.

இந்நிலையில் தனது உடல் நோயையும் பாராது திரு. வீ. வடிவேல் அவர்கள் சந்நிதி ஆல யத்திற்கு வந்து அங்கே மூன்று

திருமாலின் கடைசி அவதாரம் — கல்கி.

நாட்கள் தங்கி, தினமும் பூசை நேரங்களில் தவறாது பூசை கண்டு, சந்நிதியானின் தீர்த்தத்தை அருந்தி விபூதி தரித்து உள்ளம் உருகி வழிபாடு நடாத்தியதுடன் காவடி எடுப்பதாக நேர்த்தியும் செய்தார்கள்.

என்ன ஆச்சரியம் இரண்டாம் நாள் இரவு திரு. வடிவேல் அவர்களுக்குச் சந்நிதி முருகன் கனவிலே காட்சி தந்து அபயமளித்தார்கள். அந்த ஆனந்தக் காட்சியின் நினைவுடன் காலையில் நித்திரை விட்டு எழுந்தார். அன்றைய பகற் பொழுதுடன் வயிற்றுக் குத்து குறைவடைந்தது மூன்றாம் நாளுடன் அவருடைய வேதனை முழுமையாகச் சுகமாகியது. இதன் பின்பு ஒருமாதம் கடந்து வைத்தியசாலைக்குச் சென்ற பொழுது இதுவரை சரியாக எக்ஸ்றேக்குத் தென்படாதிருந்த கல் சரியாக இனம் காணப்பட்டு மிக எளிதாகக்கல்லு அகற்றப்பட்டது.

தற்பொழுது எந்தவிதமான நோயுமின்றி வாழ்ந்து வரும் திரு. வடிவேல் அவர்கள் தனது குடும்பத்தில் எதிர் நோக்கவேண்டியிருந்த பல மோசமான கஷ்டங்களிலிருந்தும் சந்நிதியான் தன்னைக் காப்பாற்றி வருவதனைக்கண்களில் கண்ணீர்ததும்ப எடுத்துக் கூறினார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதுமையும், அதன் புனிதமும் சாதாரணமானவர்களாற் புரிந்து கொள்ளமுடியாது போகலாம்; ஆனால் யோகர் சுவாமிகள் போன்ற ஞானிகளாலும் துறவிகளாலும் அது உணரப்பட்டே வந்துள்ளது. இதனால் தான் புனிதமான சந்நிதி ஆலயத்தில் தனது பாதங்களை வைப்பதற்குத் தனது மனம் கூசுகின்றது என யோகர்சுவாமிகள் தமது சீடர்களுக்கு ஒரு முறை தெரிவித்திருந்தார்.

இத்தகைய புனிதமான ஆலயத்திலிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சந்நிதி முருகன் திரு. வி. வடிவேல் அவர்களுக்கு நிகழ்த்திய அற்புத நிகழ்வில் அதிசயம் தான் உண்டோ?

ஓம் முருகா!

---

## மௌனத்தின் அருமை

ஒரு சமயம் முனிவர்கள் மூவர் முத்தியடையும் வழியில் மேலே சென்றார்கள். வழியில் ஒரு பருந்து பெரிய பாம்பைத் தூக்கியவாறு பறந்து போனது. அதைக்கண்டதும் ஒருவர் பாம்பின் மீது இரங்கிப் பருந்து ஒரு பாபி எனக்கூறினார். அதற்கு மேல் அவரால் போக முடியவில்லை. அவர் பூமியை நோக்கி இறங்க வேண்டியவரானார். மற்றைய முனிவர் இந்தப் பாம்புக்கு நல்ல தண்டனை என்றார். உடனே அவரும் கீழே இறங்கினார். மூன்றாமவர் எல்லாம் இறைவன் செயல் என்று கருதியவாறு மேலே சென்றார்.

---

சட்டை தரித்த வடிவம் - கஞ்சுகப்படிவம்.

உ

# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த

# மகோற்சவ கால விபரங்கள்

19 - 08 - 2001 ஞாயிறு ஆவணி 3 — மகோற்சவம் ஆரம்பம் ( காலை 10 மணி கொடியேற்றம் )

22 - 08 - 2001 புதன் ஆவணி 06 — காலைத் திருவிழா ஆரம்பம்

27 - 08 - 2001 திங்கள் ஆவணி 11 — பகல் பூங்காவனம்

28 - 08 – 2001 செவ்வாய் ஆவணி 12 — காலை கைலாசவாகனம்

31 - 08 - 2001 வெள்ளி ஆவணி 15 — இரவு சப்பறம்

01 - 09 - 2001 சனி ஆவணி 16 — காலை தேர்

02 - 09 - 2001 ஞாயிறு ஆவணி 17 — காலை தீர்த்தம்
மாலை மௌனத்திருவிழா

---

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு வழமைபோல தினந் தோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தொடர் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

காயத்தாற் செய்யப்படுவன — காயிகம்.

உ

# பாரதி படைத்த இலக்கியங்களில்
## சமயக் கருத்துக்கள்

ஆசிரியமணி M. S. ஸ்ரீதயாளன்

நம் தமிழ் மொழிக்கும் சமயத்துறைக்கும் பண்டுதொட்டே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தொல்காப்பியர்காலத்துக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரிருந்தே பண்பட்டிருந்து வந்த தமிழ்மொழி இலக்கிய நெறியோடு ஆன்மீக நெறியும் சேர வளர்ந்து வந்த செய்தியைத் தமிழ் இலக்கிய வரலாறு அருமையாகத் தெரிவிக்கிறது. சங்ககால இலக்கியங்களாம் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தொட்டுச் சென்ற சமயச் செல்நெறி; சங்கமருவிய காலத்தில் அறக்கருத்துக்களைத் தன்மாட்டில் அதிக அளவில் உள்வாங்கியமையானது. அறநெறிக்காலமாகிய சங்கமருவிய காலத்து நூல்களிலே தெற்றெனத் தெரிகிறது. அறவழியில், தர்மத்தின் சொருபியாக இறை தத்துவத்தை உணர்த்திய இக்காலம், அறமும் சமயமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக எமக்கு வாழ்வியல் அறக் கருத்துக்களை அள்ளித்தந்தது. அறத்தின் வழியிலேயே சமய ஞானமும், வாழ்வும் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்ற இக் கருத்தின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் அடுத்துவந்த பல்லவர் காலத்துப்பிறந்த இலக்கியங்கள் மிக அருமையாக எடுத்துக்காட்டின. இக்காலம் தான் தமிழர்தம் சமய விழிப்பின் உன்னத காலமாகப் பேசப்படுவது பக்திக் காலம் எனப் போற்றப்படும் பல்லவப் பெரு மன்னர் காலம்.

இக்கால இலக்கியங்கள் சைவ, வைணவ சமயச் சார்பான தேவாரத் திருமுறைகளாகவும் அருட்தோத்திரங்களாகவும் பிரபந்தங்களாகவும் இந்து சமயக் கருத்துக்களை எமக்கு அளித்தன. கலை வளர்ச்சியில் பின்னர் வந்த சோழப் பெரு மன்னர் காலமும், விஜயநகர, நாயக்கர் காலத் தமிழிலக்கியங்களும் முற்பகுதி ஐரோப்பியர் கலைத் தமிழ் நூல்களும் அவ்வக் காலத்திருந்த சமயச் செல்நெறியை எமக்கு உணர்த்தியும், வழிகாட்டியும் வந்துள்ளன. காலத்துக்குக் காலம் இத் தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்ட ஆன்மீகப் பாதை. இலக்கியங்களைப் படைத்த புலவர்களுடைய பார்வையிலும் ஆளுமை

யிலும் அதிகம் தங்கியிருக்கக் காணப்பட்டதில் தவறு சொல்வதற்கில்லை.

இந்தப் பின்னணியிலேதான் வாழையடி வாழையாகத் தோன்றி மொழியுணர்ச்சியோடு சமயநெறியையும் இரு கண்களாகப் போற்றிப் புரந்த "அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்" கூட்டத்தில் அமரகவி பாரதியாரும் இடம் பெறுதலில் வியப்பில்லை.

பாரதி, சமயத்துறையிலும் தத்துவத்துறையிலும் பெற்றிருந்த தெளிவும் திண்மையும் பொதுநோக்கும் கண்டு, வியந்து போற்றி வழிபடற்குரியவையாகும். பாரதி பேசிய சமயஞானத்தில் சைவம் மணக்கிறது. வைணவம் சிலிர்க்கிறது. சித்தாந்தம் மிளிர்கிறது. வேதாந்தம் ஒளிர்கிறது. சகல சமயங்களையும் உயர்த்தி நோக்கும் சமரச ஞானம் செழித்து நிற்கிறது. பக்திச்சுவை நனி கூடவே சொட்டுகிறது. பாரதியார் தத்துவத் துறையிலும், சமயத்துறையிலும் பின்பற்றிய நெறிக்கும் வள்ளுவரும் இளங்கோவும், ரவீந்திரரும் இராமகிருஷ்ணரும் மேற்கொண்ட நெறிக்கும் வேறுபாடு இல்லை என்றே சொல்லத் தோன்றுமளவுக்குப் புதுமைக் கவிஞனின் கடவுட்கோட்பாடானது புதுமை பெறுகிறது.

பாரதியார் பாடற்றொகுதியில் சமய, தத்துவக்கருத்துக்கள் அடங்கிய கவிதைகளையே நாம் மிகுதியாகக் காணுகின்றோம். அப்படியே அவரின் உரைநடை இலக்கியங்களிலும் சமய தத்துவத் தெளிவே செங்கோலோச்சுவதைக் காணலாம்.

தேச பக்தியைக் கூடத் தெய்வபக்தியின் அடிப்படையில் வளர்த்த பெருமை பாரதியின் தனி உரிமை.

மகாகவி பாரதியாரின் உள்ளமானது பல்வேறு நல்லுணர்வுகளுக்கும் உறைவிடமாக விளங்கிய போதிலும், சமய தத்துவ உணர்வே அவ்வுணர்வுகள் அனைத்திற்கும் உயிராக விளங்கியது. தமக்கும் தெய்வீகசக்திக்கும் இருந்த உறவைப் பாரதியார் வெளியிடும் பாடல்கள், படிப்போரை மெய்சிலிர்க்க வைப்பனவாகும்.

"செய்யுங்கவிதை பராசக்தியாலே செயப்படுங்காண்" என விநாயகர் நான்மணிமாலையிற் கூறுபவர், பராசக்தியைப் பற்றிய பாடலில்.

"நாட்டுமக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டிலே தனிஇன்பத்தை நாட்டவும் பண்ணிலே களிகூட்டவும் வேண்டிநான்
மூட்டும் அன்புக்கனலொடு வாணியை, முன்னுகின்றபொழுதெல்லாம் குரல்
காட்டி அன்னைபராசக்தி ஏழையோன், கவிதையாவும் தனக்கெனக்கேட்கிறாள்"

தன்னைப் பாடத்தூண்டியவள் அந்த அன்னை பராசக்தியே என்று காட்டுவார்.

[ தொடரும்......

உ

# அருணகிரிநாதர் விழா

சந்நிதியான் ஆச்சிரம - சைவ - கலை, பண்பாட்டுப் பேரவை, யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் அமைவுதந்த மேற்படி விழா 05 - 07 - 2001 வியாழக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வழமைபோல, ஆச்சிரமம் விழாக்கோலம் பூண்டிருந்தது. விழா நிகழ்வுகள் சந்நிதியானுக்கான விசேட அபிஷேக, ஆராதனைகளின் பின் ஆரம்பமாகின.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் தமது தலைமையுரையின்கண் கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை அருள் நாடி நாம் இருக்க வேண்டியவர்களாகின்றோம் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து 'ஆறுமுகமான பொருள்' என்னும் தலைப்பிற் சொற்பொழிவாற்றிய யாழ் / பல்கலைக் கழக மாணவன் திரு. தி. செல்வமனோகரன் அவர்கள் சடாட்சர வடிவினராக, சத்குண சொரூபியாக, ஆறுபடைவீடு அமர்பவராக, ஏறுமயிலேறி விளையாடுபவனாக என்றிங்ஙனம் எம்பெருமான் திருவருள் பாலிக்கும் சிறப்பினை எடுத்து விளக்கினார்கள்.

அடுத்து, 'குருவாய் வருவாய்' என்னும் பொருளில் தெய்வீக உரை நிகழ்த்திய சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் அவர்கள் தந்தையாருக்குக் குருவாகி அமர்ந்து ஞான உபதேசம் செய்த ஸ்ரீ முருகப் பெருமான் நமக்கெல்லாம் ஞானத்தை உணர்த்துவதற்காக அருணகிரிநாதரின் நாவினிடமாக நின்று தந்த கந்தரநுபூதிப் பாடல்கள் ஐம்பத்தொன்றும் மந்திரங்களாகப் போற்றப்பட வேண்டியன என்று விளக்கினார்கள்.

"நாளென் செயும்" என்னும் தலைப்பிற் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் திரு. ச. லலீசன் அவர்கள் கந்தரலங்காரத்தின் இடமாக, ஸ்ரீ முருகனின் பேரழகுகள் எங்ஙனம் காட்டப்பட்டுள்ளன என விளக்கினார்கள்.

அடுத்து யாழ் பல்கலைக் கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளர் திரு. ஸ்ரீ தர்ஷனன் அவர்கள் தெய்வீகத் திருப்புகழ்ப் பண்ணிசை தந்து, மெய்யடியார்களைப் பக்தி பரவசத்துக்குள்ளாக்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட நீதிபதி S. A. E. ஏகநாதன் அவர்களும், கந்தரநுபூதிப் பாடல்களை பக்திப் பரவசத்துடன் பாடி மக்களை மெய்மறக்கச் செய்தார்கள்.

முதன் முறையாக, இவ் ஆச்சிரமத்தில் இவ் விழா கோலாகலமாக நிகழ்த்தப் பெறுதற்குப் பேராதரவு வழங்கியவர் விஞ்ஞானக் கல்வி நிர்வாகி அவர்கள் என்பதும் விழா நிகழத் துணை நின்றவர் கரணவாய் திரு. ம. கதிரிப்பிள்ளை அவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

ஈற்றில், எமது பேரவையின் செயலாளர் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் தமது நன்றியுரையின் கண் இவ்விழா வருடாவருடம் இவ்வாச்சிரமத்தில் நிகழப்பெறுதற்கு எம்பெருமானின் திருவருள் விஞ்ஞானக்கல்வி நிலையத்தினர்க்குச் சித்திப்பதாக என வாழ்த்திக் கொண்டு நன்றியுரையினை நிறைவு செய்தார்கள்.

விழா முடிவில் பூஜாராதனைகள் நிகழ்த்தப்பெற்று, மாகேசுர பூஜை மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை

☘ ☘ ☘

விரதமுடிவிற் செய்யப்படும் சடங்கு — உத்தியாபனம்.

சிவமயம்

திரு. ஆ. கதிர்காமத்தம்பி அவர்களால்

ஆக்கப்பெற்ற

# "சக்தி சிவனின் அருளாட்சி"

# நூல் வெளியீட்டு விழா

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

காலம் : 03 - 08 - 2001 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

தலைவர் : பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்)

## நிகழ்ச்சிகள்

தேவாரம் : திரு. S. துரைராசா (ஆசிரியர்)

ஆசியுரை : சிவஸ்ரீ. சோ. தண்டபாணிகதேசிகர் J. P.
(வல்வை மூத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குரு,
அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர்)

வாழ்த்துரை : 1. பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
(பட்டப்படிப்பின் ஆய்வுகூடப் பீடாதிபதி யாழ் ப. கழகம்)

2. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அம்மையார்
(கக்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர், யப்பான்)

தலைமையுரை : தலைவர்

வெளியீட்டுரை : பேராசிரியர் கலாநிதி S. சிவலிங்கராசா
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

ஆய்வுரை : பண்டிதர் சைவப்புலவர்
சிவஸ்ரீ. கை. நமசிவாயக்குருக்கள்

மதிப்பீட்டுரை : ஞானபண்டித இயலரசு திரு. க. முத்துவேலு

பதிலுரை : நூலாசிரியர்

நன்றியுரை : திருமதி மா. கதிர்காமத்தம்பி

வாக்காற் செய்யப்படுவன - வாசிகம்.

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

03 - 08 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணியளவில்

நூல் வெளியீடு : ' சக்தி சிவனின் அருளாட்சி '

ஆய்வுரை : பண்டிதர், சைவப்புலவர்
சிவஸ்ரீ. கை. நமசிவாயக்குருக்கள்

மதிப்பீட்டுரை : ஞானபண்டித இயலரசு திரு. க. முத்துவேலு

---

10 - 08 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 9–30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. செ. பரமேஸ்வரன் B. A. (Hons.)

விடயம் : ' சந்நிதி வசந்தம் - III '
( ஒலி நாடா வெளியீடு )

வெளியீட்டுரை : கலாநிதி சி. சிவலிங்கராசா
( தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம் )

---

17 - 08 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை ; திரு. S. துரைராசா ( பேரவை உறுப்பினர் )

விடயம் : ' புகலிடம் பிறிதொன்றில்லை '

வழங்குபவர் : ஞானபண்டித இயலரசு க. முத்துவேலு

---

24 - 08 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. பொ. அருந்தவநாதன்
( விரிவுரையாளர், யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை )

சொற்பொழிவு : " திருமந்திரம் " ( தொடர் )

வழங்குபவர் : திரு. அ. குமாரவேல்
( விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

31 - 08 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# ஆவணி - 2001

வெளியீட்டுரை : திரு. கு. ரவீந்திரன் ( ஆசிரியர் )

மதிப்புரை : திரு. ச. விநாயகமூர்த்தி
( விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் )

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2001 ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டி யில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2002 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.